KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி!
குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 14 பெப்ரவரி 2025 இதழ்:- 07

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக் குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள்.விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## தையிட்டி விகாரை:- என்ன செய்யலாம்? விகாரையை இடிக்க முடியுமா? உள்ளே விபரமான 2 கட்டுரைகள்



தையிட்டி விகாரை ஒரு தனியார் காணியில் கட்டப்படுகிறது என்பதனால் அது சட்டவிரோதமானது என்று கூறி அதனை ஒரு சட்ட விவகாரமாக மட்டும் குறுக்குவது தமிழ் மக்களுக்குப் பொருத்தமானது அல்ல. அது சட்டப் பிரச்சினை மட்டுமல்ல, அதை விட ஆழமான பொருளில் அது ஓர் அரசியல் விவகாரம். இன ஒடுக்குமுறையின் ஆகப் பிந்திய வெளிப்பாடுகளில் ஒன்று. (15ம் பக்கமும் 6ம் பக்கமும் பார்க்க)

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters

## மாவையின் இறுதிச் சடங்கில் அநாமதேய பதாகைகள்! பின்னணியில் தமிழரசுக் கட்சியைச் சிதைக்க பல சக்திகள்

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## யாழ்ப்பாணம்:- பிழையான கேள்வியும் சரியான பதிலும்

28 அமைப்புக்களின் கூட்டணியான என்.பி.பி.யும் அதன் பிரதான பங்காளியான ஜே.வி.பி.யும், அதன் தலைவர்களும், ஜனாதிபதியும் அள்ளி வீசிய தேர்தல் வாக்குறுதிகளை கொள்கைகளை நடைமுறைப்படுத்த முடியாமல் திண்டாடுகிறார்கள். இந்த வாக்குறுதிகளை உங்களால் நிறைவேற்ற முடியாது அப்படியானால் அவற்றை எப்படிச் செய்யப் போகிறீர்கள்? என்பதை விவாதிப்பதற்கு ஒரு பொருளாதார விவாதத்திற்கு வாருங்கள் என்று எதிரணியினர் எழுப்பிய கேள்விகளுக்கு ஒரு சரியான பதில் அளிக்கப்படவில்லை.(21ம் பக்கம் பார்க்க)



## மாவை சேனாதிராஜாவின் அரசியல் வாழ்வின் மூலமான படிப்பினைகள்!

## தையிட்டி விகாரையை அகற்ற முடியாது! -அமைச்சர்

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா "சங்கீத சங்கமம் 2025" 01 யூன் 2025 ஞாயிற்றுக் கிழமைக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். இந்நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ்சொற்செல்வர் - சிவபூமி அறக் கட்டளை தாபகர் ஆறு.திருமுருகன் அவர்கள் "வேர்களைத் தேடுங்கள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகின்றார். கலைமாமணி டாக்டர் நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்களது சங்கீத சங்கமம் இசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. மேலதிக விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும். தொடர்புகளுக்கு 416 841 9600


THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**



RE/MAX REALTRON Realty Inc. Brokerage

Home of the Top Producers

## Siva Kandiah

Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

## Piravien Siva

Sales Representative B.Comm.

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



22 Years Real Estate Experience

885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated

**Bus: 416-289-3333**

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Warden/Finch



**Scarborough** **$424,900**

2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school

### Kennedy / Hwy 401



**Scarborough** **$429,900**

1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit


### Markham / Sheppard Ave



**Scarborough** **$479,000**

1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse


### McCowan / Ellesmere



**Scarborough** **$599,000**

2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC


### Mccowan & Hwy 401



**Scarborough** **$549,900**

2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views


### Kennedy / 401



**Scarborough** **$538,000**

2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining

### Simcoe St / 401



**Oshawa** **$575,900**

3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft

### Grandview Dr. / Bloor



**Oshawa** **$649,800**

2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated


### 9TH LINE / HIGHWAY 7



**Markham** **$1,100,000**

4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse

### Dixie/ Glenanna



**Pickering** **$799,000**

3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities

### Audley Rd & Rossland Rd E



**Ajax** **$799,000**

3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse

### Markham & Ellesmere



**Scarborough** **$1,050,000**

3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance


### Morningside/Mcnicol



**Scarborough** **$1,099,900**

3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout


### 401/Morningside



**Scarborough** **$1,249,000**

4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407

### 10th Line/ Hoover Park Dr



**Stouffville** **$1,499,999**

4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

### 9th Line/Hoover Park



**Stouffville** **$999,000**

4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# எதிர்ப்புகள் - மிரட்டல்களுக்கு மத்தியில் தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம்!







யாழ்ப்பாணம் வலி வடக்கு தையிட்டியில் அமைக்கப் பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றி பொது மக்களின் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி மாபெரும் போராட்டமொன்று பல்வேறு அச்சுறுத்தல்கள் எதிர்ப்புகளுக்கு மத்தியில் 11 பெப் 2025 செவ்வாய்க் கிழமை மாலை ஆரம்பமாகிய இந்தப் போரா.ட்டம் இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

விகாரைக்கு முன்பாக பல்வேறு கட்சிகளையும் சேர்ந்தவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பல நூற்றுக் கணக்கானோர் காலை முதல் திரண்டிருந்தனர். போராட்டம் இடம் பெறும் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு வீதித் தடைகள் போடப்பட்டு புலனாய்வாளர்களின் கண்காணிப்பும் தீவிரமாக இருந்தது.

பல்வேறு அச்சுறுத்தல்கள், கெடுபிடிகள், எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கறுப்பு கொடிகளுடன் பெருமளவில் திரண்ட மக்கள் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அகற்று அகற்று சட்டவிரோத விகாரையை அகற்று வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் இனப்படு கொலை இராணுவமே வெளியேறு இந்த மண் எங்களின் சொந்தமண் கண் திறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா? எமது நிலம் எமக்கு வேண்டும் போன்ற பல கோசங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் எழுப்பப் பட்டன.

பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் செயற்பட்டதால் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டதால் முறுகல் நிலை ஏற்பட்டு பதற்றமான நிலைமையும் தோன்றியது. எனினும், அச்சுறுத்தல்கள், எதிர்ப்புக்குகளுக்கு மத்தியிலும் தொடர்ந்தும் விகாரகைக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

### சட்டவிரோத விகாரை விவகாரம்:- பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பது என்ன?

தையிட்டி சட்டவிரோத விகாரை தொடர்பில் இராணுவத்தினருடனும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடனும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாக பௌத்தசாசன அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த விடயம் தேசிய ஐக்கியம் தொடர்பில் உணர்வுபூர்வமானதாக காணப்படுவதை கருத்தில் கொண்டு, இது தொடர்பில் காணப்படும் குழப்பங்களிற்கு தீர்வை காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக பௌத்தசாசன அமைச்சின் செயலாளர் ஏஎம்பிஎம்பி அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

இராணுவம் தற்போது அந்த ஆலயத்தை நிர்வகித்து வந்தாலும் அரசாங்கம் பௌத்த விவகாரங்களிற்கான ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இந்த விகாரையை பதிவு செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவம் தற்போது ஆலயத்தை நிர்வகிக்கின்றது, தற்போது அங்கு கட்டுமானப்பணிகள் இடம்பெறுகின்றன, பௌத்த மதகுரு ஒருவர் அங்கு தங்கியுள்ளார், பாதுகாப்பு அமைச்சு தன்னால் அதனை தொடர்ந்து நிர்வகிக்க முடியாது பௌத்த விவகாரங்களிற்கான ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இந்த விகாரையை பதிவு செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது என அவர் தெரிவித்துள்ள இந்த பெயரில் விகாரையொன்று ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர், ஆனால் அங்கு நிலம் மட்டுமே உள்ளது,மேலும் இராணுவத்தினரும் கடற்படையினரும் இரண்டு பௌத்த ஆலயங்களை நிர்வகிக்கின்றனர் என தெரிவித்துள்ளனர், இது குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது, இராணுவத்தினால் அதனை நிர்வகிக்க முடியாவிட்டால் அதற்கு தீர்வை காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

### கேள்வியை மக்கள் கேட்க வேண்டும்!

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் யாழ்மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்பவர்களிடம் இது தான் நீங்கள் வழங்குகின்ற நீதியா என கேள்வி கேளுங்கள் என மக்கள் போராட்ட முன்னணியின் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந் வேண்டுகோள் விடுத்துள்ளார் தையிட்டி சட்ட விரோத விகாரைக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தவேளை அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இங்க ஒருவர் இருக்கின்றார் ஜேவிபியின் பிரதான நபர் சந்திரசேகரன் என்று, இன்று அவர் அதிகாரம் படைத்த நபராகயிருக்கின்றார். தயவு செய்து அவரை எங்கே சந்தித்தாலும், இது தானா உங்கள் நீதியா என கேளுங்கள். அவர்களை வேறு எதற்கும் அனுமதிக்க வேண்டாம் முதலில் கேளுங்கள்.

உலகிலேயே நீதி வாய்ந்தவர்களாக இடதுசாரி தத்துவம் பேசுபவர்களாக தங்களை காட்டிக் கொள்பவர்கள் எந்த வித நீதியும் அற்றவர்களாக காணப்படுகின்றனர். இவர்களின் கரங்களில் (தையிட்டி விகாரைக்கு முன்னாள் பொலிஸார் படையினர்) ஒரு ஆவணமில்லை, வீதியை மறிப்பதற்கு ஒரு ஆவணம் தேவை, ஒரு ஊடகவியலாளரை மறிப்பதற்கு ஒரு ஆவணம் தேவை.

இது வெறுமனே தங்களிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை துஸ்பிரயோகம் செய்கின்றார்கள், அதிகார துஸ்பிரயோகம் தான் இங்கு இடம் பெறுகின்றது, அதிகார துஸ்பிரயோகத்தில் ஈடுபடுவதற்கான அனுமதியை வழங்கியது யார்? இந்த அரசாங்கம்

இந்த அரசாங்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் நான்கு வெங்காயங்கள் இங்கு உள்ளனர், இது தான் நீங்கள் வழங்குகின்ற ஆட்சியா என கேளுங்கள் எங்கு கண்டாலும் கேளுங்கள். இங்கிருந்து வாக்களித்த மக்கள் முதலில் வெட்கப்படடே வண்டும்.

இதேமாதிரியான அதிகாரபோக்கையும் அக்கிரம போக்கையும் தான் நாங்கள் இதுவரை கண்டிருக்கின்றோம், இதன் தொடர்ச்சியை தான் இந்த அரசாங்கமும் இதுவரை செய்கின்றது. இந்த அரசாங்கத்தின் நபர்களை எங்கு சந்தித்தாலும் நீங்கள் கேட்க வேண்டிய முக்கிய கேள்வி – இந்த விசர்க்கூத்துக்களை காட்டாமல் மக்களிற்கான நீதியை வழங்க சொல்லி கேளுங்கள் (7ம் பக்கம் பார்க்க)

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# கொழும்புப் புதைகுழி போராளிகள் குடும்பத்தினதா?



கொழும்பு துறைமுகப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதை குழிகளில் இலங்கை கடற்படையால் தடுத்து வைக்கப்பட்ட முன்னாள் போராளிகளது குடும்பங்களது தானா வென கேள்வி எழுந்துள்ளது .

தற்போது வரை முன்னெடுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் சுமார் 16 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, இரண்டு குழந்தைகளின் எலும்புக்கூடுகள் இருந்துள்ளதாகவும் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவா தெரிவித்துள்ளார்.

இந்தப் புதைகுழி வழக்கமான புதைகுழி அல்ல என்றும் உடல்கள் புதைக்கப்பட்ட விதம் அவை கொலை செய்யப்பட்டிருப்பதைக் குறிக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நிகழ்வுகளுக்கான காலப்பகுதியை விஞ்ஞான ஆய்வுக்குப் பிறகு தீர்மானிக்க முடியும்.

நீதிமன்றத்தின் அறிவுறுத்தல்களின்படி, அறிக்கைகள் வழங்கப்படும். இது வரை 13 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அதிக எண்ணிக்கையிலான உடைந்த பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மூன்று பேரின் எலும்புக்கூடுகள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சிறு குழந்தையின் கையில் செம்பு கலந்த ஏதோ ஒன்றால் கறை ஏற்பட்டதையும் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழோசை
வழங்கும்
இசைக்குயில்
CANADA

கனடாவில் முதன்முறையாக சிறந்த பாடகர்களுக்கான
இசைக்குயில் நிகழ்ச்சியை வழங்கிய தமிழோசையின்
இசைக்குயில் 2025 சிறந்த பாடகர்களுக்கான தெரிவு

FIRST NAME:..........
LAST NAME:..........
DATE OF BIRTH (nt show ID for proof:..........
PHONE NUMBER:..........
EMAIL ADDRESS:..........
EMERGENCY CONTACT NAME:..........
Phone Number:..........
Relationship:..........
Why do you want to participate in this competition?:..........
Have you ever participated in singing competitions before? Please discuss them here:..........
PARENT'S SIGNATURE:..........
PARTICIPANT SIGNATURE:..........
DATE..........

Adults Registration Fee $200
(Age 16+ )

வெற்றியாளர்கள் தென்னிந்தியாவில் இருந்து வருகைதரும் பிரபலபாடகர்களால் தெரிவுசெய்யப்படுவார்கள். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

Application deadline: February 28, 2025

விண்ணப்ப படிவங்களோடு உங்கள் பாடல் பதிவுகளையும் அனுப்ப வேண்டிய முகவரி:
isaikuyil.canada@gmail.com
மேலதிக தொடர்புகளுக்கு: 416-556-3219
*some conditions may apply




வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  GIve you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# கனடா வாழ் கருணையாளர்களே!



என் இனிய உறவுகளே! 13 ஆண்டுகளுக்கு முன் எமது இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தக் குழந்தைகள் போன்றவர்களை வாரி அணைத்து 86 குழந்தைகளோடு ஆரம்பித்து இன்று 423 குழந்தைகளின் அன்பு நிறைந்த இடமாக அன்பு இல்லம். பாரதி இல்லம். செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இலங்கங்கள் திகழ்கின்றன.

மூன்று வேளை உணவு. உடை. உறையுள் மட்டுமன்றி கல்வி மேம்பாடு விளையாட்டு. பரதநாட்டியம் என பல்வேறு துறைகளிலும் எமது இல்லக் குழந்தைகள் முன்னணி வகித்து வருகின்றார்கள்.

அன்பர்களே! அருகே காணப்படும் குழந்தைகள் போல் பலர் இன்றும் ஆலய வீதிகளிலும் கடையோரங்களிலும் நிற்கும் குழந்தைகளைப் பொறுப்பேற்க முன் வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் இருந்து தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் விட்டப்பட்டு வருகின்றன. ஆனால் எம்மால் பொறுப்பேற்க முடியாதுள்ளமைக்கு எமது இல்லத்தின் நிதி நெருக்கடியே பிரதான காரணமாகும்.



உறவுகளே! உங்கள் கருணையினை இவர்கள் பக்கமும் திருப்புங்கள்! எமது சந்ததியை நாமே காப்பாற்றுவோம்! ஒரு இல்லத்துக் குழந்தைகளுக்கு உணவளிக்க ஒரு நாளுக்கு 200.00 டொலர்கள் மட்டுமே. ஒரு நாள் உணவளிக்க முடியாதோர் ஒரு வேளை உணவுக்கு 100.00 டொலர்கள் தாருங்கள். மேலதிக விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் பார்க்கலாம். ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி 14 ஆண்டுகளாகத் தொடர்கின்றது. தொடர்புகளுக்கு பரமேஸ் 416 841 9600

எமது வாழ்நாளில் ஒரு மலையைப் புரட்ட முடியவில்லையே என்ற கவலையை விடுவோம்! ஒரு குழந்தைகளுக்கு உணவளித்தோம் என்று மகிழ்வோடு வாழ்வோம். வாருங்கள்! இணையுங்கள்!

# அரசியலமைப்பு விடயங்களைப் பின் போட்டால் மாகாணசபையை செயற்படுத்த வேண்டும்

அரசியலமைப்பு விடயத்தையும். பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வு விடயத்தினை சமநேரத்தில் முன்னெடுப்பதற்கான இயலுமை தற்போதைய அரசாங்கத்திடத்தில் காணப்படவில்லை.

அரசாங்கம் அரசியலமைப்பு விடயத்தினை பொருளாதார விடயங்களை கையாண்டதன் பின்னர் கையாள்வதற்கு முனைகின்றது என்று கருதுகின்றேன். எனினும் அரசியலமைப்பு சம்பந்தமான விடயம் முக்கியமானது. வடக்கு. கிழக்கில் உள்ள மக்களின் பிரதான எதிர்பார்ப்பு தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகும்.

ஆகவே பொருளாதார விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் அரசாங்கம் சமகாலத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தி அவற்றை வினைத்திறனாக செயற்படுத்துவதன் ஊடாக வடக்கு.கிழக்கு மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியும் என்று தேசிய சமதானப்பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி.ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

அரசாங்கம் அரசியலமைப்பு விடயங்களை விடவும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பிலேயே முன்னு



ரிமை அளித்து கரிசனைகளை கொண்டுள்ளதென்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்த கருத்து தொடர்பில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# டிரம்ப் கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க ஆசைப்படுவது உண்மை



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் உண்மையாகவே கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க விரும்புகின்றார் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வர்த்தக சமூகத்தினர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கும் டிரம்பின் ஆசை உண்மையானது என ட்ரூடோ தெரிவித்துள்ளார். எங்கள் நாட்டை கைப்பற்றி அமெரிக்காவுடன் இணைப்பது இலகுவான விடயம் என டிரம்ப் எண்ணுகின்றார் என ட்ரூடோ தெரிவித்துள்ளார். ஒலிவாங்கி செயற்பட்டுக் கொண்டிருந்ததை அறியாமல் கனடா பிரதமர் இதனை தெரிவித்தார் பின்னர் ஒலிவாங்கி நிறுத்தப்பட்டது என கனடா ஊடகங்கள் தெரிவித்துள்ளன. டிரம்ப் கனடாவின் கனிம வளங்கள் மீது கண் வைத்து ள்ளார் அவர்களிற்கு எங்கள் வளங்களை பற்றி தெரியும் எங்களிடம் என்ன உள்ளது என்பது தெரியும் இதன் காரணமாகவே அவர்கள் எங்களை தங்களுடன் இணைந்து 51வது மாநிலமாக மாற்றுவது குறித்து பேசுகின்றனர் என தெரிவித்துள்ளார்

# எதைப் பேசுவதென்று தெரியாத நிலையில்...

விமல் வீரவன்ஸ. உதய கம்மன்பில போன்றவர்கள் அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும் ஆனால். எதை வைத்து எதிர்ப்பது என்று தெரியாத நிலையில் அவ்வப்போது ஏதாவது ஒன்றைப் பேச முற்படுகின்றனர். அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்தும் ஓர் அரசாக இருப்பதாக விமல் வீரவன்ஸ தெரிவித்திருக்கின்றார்.

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் சிங்கள அடிப்படைவாதத்தின் ஊதுகுழல் போன்று தொழில் பட்டு வந்த வீரவன்ஸ. சரத் விஜயசேகர போன்றவர்கள் அண்மைக் காலமாக என்ன பேசுவதென்று தெரியாத நிலையில் இருக்கின்றனர். ஆனாலும் அரசியலில் தாங்களும் இருக்கின்றோம் என்பதைக் காண்பிக்க வேண்டும் என்னும் முனைப்பில் தொடர்பற்ற வகையில் அவ்வப்போது பேசுகின்றனர். இவ்வாறு பேசுபவர்கள் தமிழ்ச் சூழலிலும் இல்லாமல் இல்லை.

தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து வழக்கமான பாணி அரசியலை முன்னெடுப்பதில் சிலர் நெருக்கடியை சந்தித்திருக்கின்றனர். பெருமளவுக்கு அவர்கள் அரசியலில் தாக்குப்பிடிக்க முடியாதளவுக்கு ஓரங்கட்டப் பட்டிருக்கின்றனர். விமல் வீரவன்ஸ. சரத் விஜயசேகர போன்றவர்கள் எல்லாக் காலத்திலும் தமிழர் விரோத அரசியலை முன்வைத்து சீவிக்கலாம் என்று எண்ணுபவர்கள். அவ்வாறானவர்கள் கொழும்பில் செல்வாக்கு மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணும் தமிழ் அரசியல் குழுக்களும் இல்லாமல் இல்லை.

இதன் மூலம் எதிரிக்கு எதிரி நண்பன் என்னும் வகையில் எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கலாம் என்று கருதுபவர்களும் இருக்கின்றனர். ஆனால். அடிப்படையில் இவ்வாறான எதிர்ப்பு அரசியல் போக்கால் எதனையும் இதுவரையில் இரண்டு தரப்புக்களுமே சாதிக்கவில்லை. மாறாக நாட்டை அதலபாதாளத்துக்கு தள்ளியது தான் மிச்சம். தமிழர் பக்கத்தில் எதிர்க்கப்பட வேண்டிய விடயங்கள் எதிர்க்கப்படத் தான் வேண்டும். ஆனால். எதிர்க்க வேண்டிய அழுத்தமாக வலியுறுத்த வேண்டிய விடயங்களை விட்டுவிட்டு வெறுமனே தேர்தல் அரசியலுக்குப் பயன்படக் கூடிய விடயங்களைக் கையில் எடுப்பது தான் தவறானது.

உண்மையில். தமிழர் பக்கத்தில் எதிர்க்கப்பட வேண்டிய முக்கிய விடயம் மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்தும் அரசாங்கம் பிற்போடுவதாகும் இது வன்மையாக எதிர்க்கப்பட வேண்டும். அரசமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்தப் படாமல் இருப்பது எதிர்க்கப்பட வேண்டும். ஆனால் தமிழ் மக்களுக்காக அரசியலை முன்னெடுப்பதாகக் கூறிக் கொள்ளும் அரசியல் கட்சிகள் எவையுமே இது பற்றிப் பேசவில்லை அதற்காக வீதிக்கு இறங்கவில்லை. உண்மையில். அரசாங்கங்களின் அணுகுமுறை ஜனநாயக விரோதமானது ஆனால். இது பற்றி பேசுவதற்கு பிரத்தியேக எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தமிழ் கட்சிகள் தயாராக இல்லை.

தென்னிலங்கையில் சிங்கள மக்களின் நலன்களை முன்வைத்து அரசாங்கத்தை எவ்வாறு எதிர்கொள்வது என்று தெரியாமல் அடிப்படைவாதிகள் தடுமாறிக் கொண்டிருக்கின்றார்கள் என்றால். மறுபுறமாக. தமிழ்ச் சூழலில். எந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தை எதிர்கொள்ள வேண்டுமோ. அந்த விடயங்களை விட்டு விட்டு ஏற்கனவே கட்டப்பட்ட விகாரைகள் தொடர்பில் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மற்றவர்களை விடவும் தாங்கள் வித்தியாசமானவர்கள் என்பதைக் காண்பிக்க முற்படுகின்றனர். இந்த விடயத்தைத் தான் தமிழ் கட்சிகள் கச்சிதமாக பற்றிக் கொள்ள வேண்டும். முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி. அதன் முழுமையான இயங்கு நிலைக்கு வழி வகுக்க வேண்டும் என்னும் குரலை தமிழ் கட்சிகள் முன்வைக்க வேண்டும்.

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா "சங்கீத சங்கமம் 2025" 01 யூன் 2025 ஞாயிற்றுக் கிழமைக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். இந்நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ்சொற்செல்வர் – சிவபூமி அறக் கட்டளை தாபகர் ஆறு. திருமுருகன் அவர்கள் "வேர்களைத் தேடுங்கள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகின்றார். கலைமாமணி டாக்டர் நித்தியஸ்ரீ மகாதேவன் அவர்களது சங்கீத சங்கமம் இசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது. மேலதிக விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும். தொடர்புகளுக்கு ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

# தையிட்டி விகாரையை இடிக்க முடியுமா?





தையிட்டி விகாரை கட்டப்பட்டது இப்போது பிரச்னையில்லை ஆனால், அது தனியார் காணியில் கட்டப்பட்டது தான் பிரச்னை. எனவே, குறித்த விகாரை அகற்றப்பட வேண்டும். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்வைத்த விடயத்தை தற்போது அடைக்கலநாதனும் உச்சரித்திருக்கின்றார். ஒரு சிறிய புத்தர் சிலையை அகற்றுவதென்றால் அது வேறு விடயம்.

மிகவும் பிரமாண்டமாக கட்டப்பட்டிருக்கும் ஒரு விகாரையை எவ்வாறு அகற்றுவது. அது நடைமுறைக்கு சாத்தியமான விடயமா? இந்தக் கேள்விக்கு அப்பால், குறித்த விகாரை கட்டப்பட்டு அதில் வழிபாடுகளும் இடம் பெற்று வரும் சூழலில் தான், குறித்த விடயத்தை தமிழ் அரசியல்வாதிகள் கையிலெடுத்திருக்கின்றனர். அந்த விகாரை கட்டப்படும் வரையில் இந்த அரசியல்வாதிகள் என்ன செய்து கொண்டிருந்தனர்.

உண்மையில் அது ஒரு தனியார் காணி என்றால் அதற்கான உரிய ஆவணங்களுடன் பொலிஸில் முறைப்பாடு செய்து, அதனைத் தொடர்ந்து, நீதித் துறையை நாடியிருக்கலாம். உதாரணமாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கோ அல்லது செல்வம் அடைக்கலநாதனுக்கோ உரித்தான காணியில் விகாரை கட்ட முடியுமா? அவ்வாறு கட்ட முயற்சிக்கும்போது அவர்கள் அமைதியாக இருந்திருப்பார்களா? தையிட்டி விகாரையின் உரிமையாளர்கள் எதற்காக அமைதியாக இருந்தனர்?

இன்று காணியின் உரிமை தொடர்பில் விவாதம் செய்வோர் ஏன் அன்று அமைதியாக இருந்தனர்? அநுரகுமார அரசாங்கத்துக்கு நெருக்கடியை அல்லது தர்மசங்கடத்தை ஏற்படுத்துவதற்கான ஓர் உபாயமாக இந்த விடயத்தை கையிலெடுத்தால், அது மிகவும் சிக்கலான விளைவுகளை ஏற்படுத்தலாம். ஏனெனில், இது அடிப்படையில் ஒரு மத விவகாரம். இலங்கையின் இரண்டாவது அதி உயரமான விகாரையாகக் கணிக்கப்படும் ஒரு விகாரையை இடித்தல் என்பது, இலங்கையின் அனைத்து சாதாரண சிங்கள மக்களையும் தாக்கக் கூடிய ஒரு விவகாரமாக மாறினால் மீண்டும் நாட்டில் இனக் குரோதங்களே மேலோங்கும்.

நிச்சயம் அநுர அரசாங்கம் இந்த விடயத்தில் சமரசம் செய்யப் போவதில்லை. அதேவேளை, தமிழ் மக்கள் மத்தியிலும் இந்த விடயத்துக்குப் பரந்த ஆதரவு கிடைக்கப் போவதில்லை. ஏனெனில், தமிழ் மக்கள் பாரம்பரிய கட்சிகள் தொடர்பில் நம்பிக்கையுடன் இல்லை.

அதே வேளை ஒப்பீட்டடிப்படையில் அதிக பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் கட்சியான இலங்கை தமிழ் அரசு கட்சி இந்த விடயத்தில் அமைதியாக இருக்கின்றது. உண்மையில், குறித்த தையிட்டி விகாரைக்கான அடிக்கல் நல்லாட்சி அரசாங்க காலத்தில் தான் இடப்பட்டது.

அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் தேனிலவில் இருந்தது. அந்தத் தேனிலவில் தமிழ் அரசு கட்சி, ரெலோ, டி.பி.எல்.எவ். (புளொட்) ஆகியவற்றுக்கு பிரதான பங்குண்டு. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் கூட, தமிழ் அரசியல்வாதிகள் இந்த விடயத்தை ஒரு முக்கிய விடயமாக முன்வைக்கவில்லை. குறிப்பாக ஜன நாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

பொது வேட்பாளர் விடயத்துக்கு ஆதரவளித்து வந்த நிலையில் கூட, ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உரையாடத் தவறவில்லை. அந்தளவுக்கு ரணிலுடன் அவர்களுக்கு நெருக்கமிருந்தது. ஆனால், இந்த விடயம் தொடர்பில் தவறியும் அவர்கள் ரணிலை நோக்கி விரல் நீட்டவில்லை.

அதே வேளை தையிட்டி விகாரைக்கான அடிக்கல் நாட்டப்பட்ட போது, அப்போது, வீடமைப்பு அமைச்சராக அமைச்சராக இருந்த சஜித் தனது தந்தையான ரணசிங்க பிரேமதாஸவின் 94ஆவது பிறந்த தினத்தின் போது, 1,125 விகாரைகள் என்னும் சசுனட்ட அருண என்னும் திட்டத்தை அறிவித்தார்.

அவருக்குத் தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி தனது ஆதரவை வழங்கிருந்தது. இன்றைய சூழலில் தையிட்டி விகாரையை ஓர் அரசியல் உணர்வெழுச் சிக்கான கருவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தமிழ் அரசியல்வாதிகள் சிலர் எண்ணக்கூடும்.

ஆனால், அது நிச்சயம் மத ரீதியான குரோதங்களை வளர்க்கவே பயன்படும். ஏனெனில், அதற்கான அடிக்கல் நாட்டமுற்படும் போது, அனைத்துத் தமிழ் அரசியல்வாதிகளும் ஒன்றுபட்டு அதனை எதிர்த்திருக்க வேண்டும் அவ்வாறில்லாது, தற்போது அதனை இடிக்க வேண்டும் என்று கூறுவதானது வெளியார் மத்தியிலும் மதரீதியான குரோதமாகவே பார்க்கப்படும். ஒரு விகாரையை, ஆலயத்தை இடிக்க வேண்டும் என்று கூறும் விடயத்தை இராஜதந்திர சமூகம் ஒருபோதும் ஆதரிக்காது.

# ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா விலகுவதால் இலங்கைக்குப் பின்னடைவு இல்லை



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகுவதால், இலங்கை தொடர்பான தீர்மானத்தில் பாரிய மாற்றங்களோ அல்லது பின்னடைவோ ஏற்படாது எனச் சுட்டிக்காட்டியிருக்கும் சுமந்திரன் மற்றும் கஜேந்திரகுமார், இருப்பினும் இலங்கை தொடர்பான தீர்மானத்தைத் தாம் நிராகரிப்பதை அமெரிக்கா விலகுவதைக் காரணங்காட்டி அரசாங்கம் நியாயப்படுத்தக் கூடும் எனத் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அதன் உறுப்புரிமையிலிருந்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்கா வெளியேறுமெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் அமெரிக்காவின் வெளியேற்றம் இலங்கை விவகாரத்தில் தோற்றுவிக்கக் கூடிய சாதக, பாதக நிலைமைகள் தொடர்பில் பலரும் மாறுபட்ட கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் கலாநிதி பிரதிபா மஹாநாம ஹேவா, 'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ள அமெரிக்கா எதிர்வரும் 58 ஆவது அமர்வில் வெளியேறவுள்ளதால் நாட்டுக்குப் பெரும் சாதகநிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இது பற்றிக் கருத்துரைத்த இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், ஏற்கனவே டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்தின்கீழ் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகியதாகவும், அப்போது இலங்கை குறித்த தீர்மானத்துடன் தொடர்புடைய நகர்வுகளை பிரிட்டன் தலைமைத்துவம் வழங்கி முன்னெடுத்துச் சென்றதாகவும் சுட்டிக்காட்டினார். எனவே இம்முறை மீண்டும் அமெரிக்கா விலகும் பட்சத்தில், இலங்கை தொடர்பான நகர்வுகளை பிரிட்டன் உள்ளிட்ட ஏனைய இணையனுசரணை நாடுகள் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்லும் எனவும், அதில் பின்னடைவு ஏற்படும் என்று தான் கருதவில்லை எனவும் தெரிவித்தார்.

அத்தோடு இலங்கை குறித்த பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் வதிவிடப்பிரதிநிதி மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்குத் தாம் உத்தேசித்திருப்பதாகவும் சுமந்திரன் கூறினார்.

அதேவேளை ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகுவதால் இலங்கை விவகாரத்தில் குறிப்பிடத்தக்க பாரிய மாற்றங்கள் எவையும் ஏற்படாது எனக் குறிப்பிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஆனால் இலங்கை தொடர்பான தீர்மானத்தைத் தாம் நிராகரிப்பதை அமெரிக்கா விலகுவதைக் காரணங் காட்டி அரசாங்கம் நியாயப்படுத்தக்கூடும் என விசனம் வெளியிட்டார்.

# மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்காவின் வெளியேற்றம் என்ன செய்யும்!

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றமையைத் தொடர்ந்து பல அதிரடி மாற்றங்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார். இதில் பிரதானமானது அமெரிக்க உதவித் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டிருப்பது. அமெரிக்க உதவித் திட்டத்தின் மூலம் பல கொழும்பு மைய அரசுசாரா நிறுவனங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்தது ஆச்சரியமானது அல்ல மாறாக, எதிர்பார்க்கப்பட்டது. அதாவது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா வெளியேறும் உத்தரவை ஜனாதிபதி ட்ரம்ப் பிறப்பித்திருக்கின்றார்.



குடியரசுக் கட்சி ஆட்சியிலிருக்கும் போது அமெரிக்க நிர்வாகம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைக்காது. இது அவர்களின் கொள்கை நிலைப்பாடு. ஐ. நா. மனித உரிமைகள் பேரவை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து குடியரசுக் கட்சியின் கொள்கை நிலைப்பாடு அது தான். இதனை எவரும் மாற்ற முடியாது.

ஜனாதிபதி ட்ரம்பின் முதலாவது ஆட்சிக் காலத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்த நிக்கி ஹெலே மனித உரிமைகள் பேரவையை கடுமையான வார்த்தைகளால் விமர்சித்திருந்தார். இந்தப் பேரவை ஆகக் குறைந்தது, அதன் பெயருக்குக்கூட உண்மையானதாக இருக்கவில்லை — முற்றிலும் சார்பு நிலைப்பாட்டியிலேயே இயங்கிவருகின்றது. மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து பணியாற்றுவதும் பின்னர் அதிலிருந்து வெளியேறுவதுமாக அமெரிக்க நிர்வாக ஆட்டம் அப்படியே தொடரும்.

இங்கு கேள்வி இந்த ஆட்டத்தை நம்பி அரசியலில் சீவிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் என்ன செய்யப் போகின்றனர்? அமெரிக்கா தொடர்பில், இந்தியா தொடர்பில், இடையில் சீனா தொடர்பில் கருத்துக் கூறும் தமிழ் அரசியல்வாதிகளும் சில ஆருடம் கூறும் கருத்துருவாக்கிகளும் இருக்கின்றனர். இவர்களின் ஆருடங்களுக்கு என்ன நடந்தது? யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து, சர்வதேசத்திடம் நீதியை கோரப் போவதாகக்கூறிய தமிழ் அரசியல் தரப்புகள் சாதாரண தமிழ் மக்களுக்கு விளங்காத சொற்களை உச்சரிப்பதன் மூலம் தங்களுக்குள் யார் உத்தமர்கள் என்று சண்டையிட்டுக் கொண்டன.

இனப்படுகொலை இடம்பெற்றதா அல்லது இல்லையா என்று கூறி ஒரு தரப்பை இன்னொரு தரப்பு குற்றஞ்சாட்டிக் கொண்டது. தமிழர் விவகாரத்தை ஐ. நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து ஐ. நா பொதுச் சபைக்கு கொண்டு செல்லப் போவதாகவும் ஒரு தரப்புக் கூறியது. தங்களுக்கு அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தால் இதனை சாத்திப்படுத்தலாம் என்றும் ஒரு கட்சி கூறியது. மறு புறம், புலம்பெயர் தமிழ்க் குழுக்களோ இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்துக்கு கொண்டு செல்லப் போவதாகக் கூறினர்.

இவ்வாறான கதைகளுக்கு என்ன நடந்தது? இன்று நிலைமைகளை திரும்பிப் பார்த்தால் தமிழர் தரப்புகளின் சர்வதேச சமூகத்தை நோக்கிய கோரிக்கைகள் அனைத்துமே, கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு கீழிறங்கியுள்ளது. இதற்கு அடிப்படையான காரணம் என்ன? தங்களின் அரசியல் பலம் என்ன? தாங்கள் எந்த நிலையிலிருக்கின்றோம்? தற்போதைய நிலையில் சாத்தியப்படக் கூடியது என்ன? இந்த விடயங்கள் பற்றி சிந்திக்காமல், தங்களை உலகமே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதாக எண்ணிக் கொண்டதன் விளைவாகத்தான் இன்று இருந்த நிலையை விடவும் நிலைமை மேலும் மோசமாகியிருக்கின்றது.

இன்றைய நிலையில் ஈழத் தமிழர்கள் தொடர்பில் பரிவுடன் நோக்குவதற்கு எவருமே இல்லை என்பது தான் உண்மை. நாடுகளின் நலன்களுக்கான அரசியல் ஆட்டத்தில் நின்றுநிலைக்கும் பலமற்ற சிறிய இனக் கூட்டங்கள் காணாமல் போய்விடுகின்றன என்னும் வரலாற்று உண்மைக்கு ஈழத் தமிழரும் உதாரணமாகிக் கொண்டிருக்கின்றனர் என்பது மட்டும் தான் உண்மை. இதற்கான முழுப் பொறுப்பும் ஈழத் தமிழர் அரசியலை தவறாக வழிநடத்திய இப்போதும் தவறாக வழி நடத்திக் கொண்டிருக்கின்ற தமிழ் அரசியல் தரப்புகளையே சாரும்.

# ஜே.வி.பி.யின் புதிய அரசியலமைப்பு

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதை விடவும் பொருளாதார பிரச்னைகளுக்கே தமது அரசாங்கம் முன்னுரிமையளிப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளித்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கின்றார். இது ஏற்கனவே ஈழநாடு அனுமானித்திருந்த விடயம் தான் அத்துடன் இவ்வாறான நிலைமை ஏற்படும் என்பதையும் முன்னைய தலையங்கங்களில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

தற்போதுள்ள நிலையில் பொருளாதார பிரச்னை முக்கியம் என்பதை விடவும், புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டு வருவதில் பல சவால்கள் உண்டு. ஒரு வேளை அவ்வாறான முயற்சி அரசாங்கத்தின் வீழ்சிக்கும் வழி வகுக்கக் கூடும். புதிய அரசியலமைப்பு என்பது உண்மையில் அவசியமற்ற ஒன்று ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அவ்வாறான வாக்குறுதியை பொது மக்களுக்கு வழங்கியிருந்தது. ஆனால் கடந்த காலங்களில் இவ்வாறான வாக்குறுதிகளை வழங்கிய அரசாங்கங்கள் அதனை நடைமுறைப்படுத்தவில்லை என்பதுடன், அதற்கான முயற்சிகளைக் கூட மேற்கொள்ளவில்லை.

சந்திரிகா குமாரதுங்கவும் பல வாக்குறுதிகளுடன், தமிழ் மக்களின் ஆதரவில், அதிகாரத்தை கைப்பற்றியிருந்தார் ஆனால் அவர் எதிர்பார்த்தவாறு எதனையும் முன்னெடுக்க முடியவில்லை. புதிய அரசியலமைப்பு ஒன்றுக்கான முயற்சியை நல்லாட்சி அரசாங்கம் என்று தங்களை அழைத்துக் கொண்ட ரணில் மைத்திரி அரசாங்கம் முன்னெடுத்தது. இது தொடர்பான நம்பிக்கையை சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பும் பரப்பியது. ஆனால், இறுதியில் அந்த முயற்சி பரிகசிக்கத்தக்க வகையில் முடிவுற்றது. அவ்வாறானதொரு நிலைமை தங்களுக்கு ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் எச்சரிக்கையுடன் இருப்பதாகவே தெரிகின்றது.

உண்மையில் புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதில் உறுதியாக இருந்தால் ஆட்சியை கைப்பற்றியவுடன் அதனை முன்னெடுத்திருக்க வேண்டும் காலத்தை கடத்தினால் பல சவால்கள் ஏற்படும். ஆனால் தற்போது அரசாங்கம் காலம் தாழ்த்தியே அதனை முன்னெடுக்க வேண்டும் என்றவாறான அபிப்பிராயத்தையே முன் வைத்து வருகின்றது. உண்மையில் புதிய அரசியலமைப்பு நாட்டுக்குத் தேவையா என்றால் தேவையற்றது என்பதுதான் பதிலாக இருக்க முடியும் ஏனெனில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று, தேசிய இனப்பிரச்னையை தீர்க்கும் விருப்புறுதி அரசாங்கத்திடம் இல்லை.

இவ்வாறானதொரு நிலையில் எதற்காக புதிய அரசியலமைப்பு தொடர்பில் நேரத்தை விரயமாக்க வேண்டும். ரணில் மைத்திரி காலம் என்பது அவ்வாறான கால விரையக் காலம்தான். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கக்கூடும்.

அதேவேளை, புதிய அரசியலமைப்பு விடயத்தை அரசாங்கம் உச்சரித்தால், அரசாங்க எதிர்பாளர்கள் அனைவருக்கும் மெல்லுவதற்கு அவல் கிடைத்து விடும். எதுமின்றியே அவர்கள் குமுறிக் கொண்டிருக்கின்றனர். தவிர, புதிய அரசியலமைப்பை கருத்தில் கொண்டு சாதாரண சிங்கள மக்கள் அநுர குமாரவையும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தையும் அதிகாரத்திற்கு கொண்டு வரவில்லை.

# தமிழரின் மதிப்பைக் கெடுக்க நாடாளுமன்றம் வந்துள்ள கோமாளி அர்ச்சுனா இராமநாதன்



தமிழர்களுக்கென தனி மதிப்பு உள்ளது. அந்த மதிப்பை சீர்குலைப்பதற்கு அவ்வப் போது துரோகிகளும், கோமாளிகளும் வந்து செல்வதும் வழமை. அப்படிதான் இம்முறையும் கோமாளியொன்று நாடாளுமன்றம் வந்துள்ளது என தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணநாதன் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

பிரதேசவாதம் பேசி தமிழர்களை பிரித்தாள்வதற்காக கைக்கூலியாக வந்துள்ள இந்த நபர், கத்தரி தோட்ட வெருளிகள் பற்றி கதைப்பது வெட்கக்கேடாகும்.

இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் சம உரிமைகள் உள்ளன. எவரும் இரண்டாந்தர பிரஜைகள் அல்லர் என்ற நிலைப்பாட்டிலேயே தேசிய மக்கள் சக்தி உள்ளது.

நாட்டில் வாழும் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைக்ககூடிய கட்சிதான் தேசிய மக்கள் சக்தி. மாற்றம் வேண்டும் என்பதற்காகவே யாழ். மக்களும் எமக்கு அமோக ஆதரவை வழங்கினர்.

இந்த மக்கள் ஆணையை புரிந்து கொள்ள பக்குவமில்லாத அரசியல் கோமாளி, தற்போது விமர்சன அரசியலை முன்னெடுத்து வருகின்றது.

சமூகவலைத்தளங்களில் பிரபல்யமடைவதற்காக வீர வசனங்களை பேசி, தன்னையும், தன்னை சூழவுள்ள ஒரு சிலரை பற்றி மட்டுமே பேசும் கோமாளிகளெல்லாம் தலைவர்களாக முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

எமது மலையக உறவுகள் தமிழர்களின் சுயநிர்ணய கோரிக்கைக்கு எதிராக நின்றதில்லை. உரிமைப் போராட்டங்களைக்கூட ஆதரித்துள்ளனர். எனவே இணைந்து வாழும் எங்களை பிரதேசவாதத்தை கிளப்பி விட்டு பிரித்தாள முடியாது என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றோம். தென்னிலங்கையில் மஹிந்தவும், அவரின் சகாக்களும் செய்த அரசியல் பாணியை, வடக்கில் செய்வதற்கு இந்த கோமாளி முற்படுகின்றது என்றார்.

# எதிர்ப்புகள் - மிரட்டல்களுக்கு..

(3ம் பக்கத் தொடர்ச்சி) சாதாரணமாக அனைத்து மக்களிற்கும் சமமாக இருக்ககூடிய சட்டம் தையிட்டியில் உள்ளவர்களிற்கு மாத்திரம் வேறு மாதிரியாக உள்ளது என்றால் இது என்ன நாடு? இதனை தட்டிக் கேட்கின்ற ஆட்களை நோக்கி எவ்வளவு பேர் கேள்வி கேட்கின்றார்கள் யாரை நோக்கி கேள்வி கேட்கவேண்டும்? அதிகாரத்தையும் இந்த அரசாங்கத்தையும் நீதிமுரணாக செயற்பட்டவர்களை நோக்கித்தான் எப்போதும் கேள்வி கேட்கவேண்டும். ஆனால் கேள்விகள் யாரை நோக்கி கேட்கப்படுகின்றது போராடுகின்ற மக்களையும் பாதிக்கப்பட்ட மக்களையும் நோக்கி கேட்கப்படுகின்றது.

இதேவேளை தையிட்டியில் அந்த பகுதியை சேர்ந்த தமிழ் குடும்பங்களின் காணி உரிமைகளில் கை வைவக்கின்ற போது, ஒவ்வொரு தமிழனின் தலையிலும் கை வைப்பதற்கு அது சமமானது என நாங்கள் கருத வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

# தமிழ்த்தேசியத்தை இறுதி மூச்சு வரை நேசித்தவர் பாரதி



எமது ஈழநாடு பத்திரிகைக்கு எந்தச் செய்தியையும் முந்தித் தருகின்ற ஈழத்து ஊடகவியலாளர்களில் ஒருவராக ஏறக்குறைய 20 வருடங்களுக்கு மேலாக எம்மோடு ஒன்றித்துப் பயணித்தவர் பாரதி அவர்கள்.

ஒரு ஊடகவியலாளருக்கு இருக்க வேண்டிய பண்பு மரியாதை மற்றவர்களை மதிக்கின்ற மாண்பு, தன் அடக்கம் இவை அத்தனையையும் தன்னகத்தே கொண்டு வாழ்ந்தவர் பாரதி அவர்கள்.

தமிழ் இனத்தின் மீதும் தமிழீழத் தேசத்தின் மீதும் மிகுந்த அக்கறை கொண்ட மனிதராக அவர் வாழ்ந்தார்.

2019ம் ஆண்டு எமது ஈழநாடு பத்திரிகையின் 26வது ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசியத்தை உளமார நேசித்த ஒரு ஊடகவியலாளராக விளங்கிய பாரதி அவர்களது மறைவு ஓர் பேரிழப்பாகும். அன்னாரை இழந்த தமிழ் ஊடகத்துறையினருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பிலும் எனது குடும்பத்தினர் சார்பிலும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு பாரதி இராஜநாயகம் அவர்கள் ஞாயிறு தினக்குரல், தினக்குரல் இணையம் ஆகியவற்றின் முன்னாள் பிரதம ஆசிரியரும் வீரகேசரி வட பிராந்திய பதிப்பின் ஆசிரியருமான மூத்த ஊடகவியலாளர் இராசநாயகம் பாரதி ஞாயிற்றுக்கிழமை தனது 63 ஆவது வயதில் காலமானார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட பாரதி, தினக்குரல் முன்னாள் உதவி ஆசிரியரான தேவகியின் துணைவரும் ஒரு பிள்ளையின் தந்தையுமாவார்.

பாரதி 1980களில் ஈழமுரசு பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் பணியாற்றினார். அதன் பின்னர் முரசொலி பத்திரிகையின் ஆசிரிய பீடத்திலும் பணியாற்றிய நிலையில், கொழும்பை வதிவிடமாக்கிக் கொண்ட காலப்பகுதியில் வீரகேசரி பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் உதவி ஆசிரியராக பணியாற்றினார்.

1997ஆம் ஆண்டு தினக்குரல் பத்திரிகை தோற்றம் பெறவே அதில் தன்னை இணைத்துக் கொண்ட பாரதி, ஞாயிறு தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக 2021ஆம் ஆண்டு வரை பணிபுரிந்ததுடன் தினக்குரல் ஒன்லைன் ஆசிரியராகவும் இருந்தார்.

பின்னர், மீண்டும் தனது யாழ்ப்பாணம் திரும்பிய பாரதி யாழ்ப்பாண ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றியதுடன் தற்போது வீரகேசரியின் வட பிராந்திய பதிப்பின் ஆசிரியராக பணிபுரிந்த வேளையிலேயே காலமானார்.

இவர் ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் ஆர்.பாரதி அபிமன்யு பார்த்தீபன் (அவரது மகனின் பெயர்) ஆகிய பெயர்களில் பல்வேறு கட்டுரைகளை எழுதி வந்ததுடன் சர்வதேச ஊடகங்களுக்கும் அரசியல் கருத்துகளையும் செவ்விகளையும் வழங்கி வந்தவர் ஆவார்.

பல மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட ஊடக பயிற்சிப்பட்டறைகளிலும் வளவாளராக பாரதி பயிற்சிகளை வழங்கியுள்ளார். அது மட்டுமன்றி, தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஸ்தாபக உறுப்பினரான பாரதி, பின்னர் அதன் தலைவராகவும் செயலாளராகவும் இருந்துள்ளார். .

எழுத்தில் நேர்மையையும் பத்திரிகைப் பணியில் உயர் அர்ப்பணிப்பையும் கொண்டு செயலாற்றிய பாரதி இராசநாயகத்தின் மறைவுக்கு பல்வேறு தரப்பினரும் இரங்கல் தெரிவித்து உள்ளனர்.

# மாவையின் இறுதிச் சடங்கில் அநாமதேய பதாகைகள்! பின்னணியில் தமிழரசுக் கட்சியைச் சிதைக்க பல சக்திகள்

மறைந்த தலைவர் மாவை.சோ.சேனதிராஜாவின் இறுதிச்சடங்கு நடைபெற்ற மயானத்தில் கட்சியின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மத்திய குழு உறுப்பினர்கள் 18பேருக்கு எதிராக அநாமதேய பதாகையை காட்சிப்படுத்தியத்தின் பின்னணியில் உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் பல காணப்படுகின்றன என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.சே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எமது கட்சியை சிதைத்து ஓரங் கட்டுவதே அந்த சக்திகளின் பிரதான நோக்கமாக இருக்கின்றது என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டியதோடு, அவ்விடயம் தொடர்பில் முழுமையான விசாரணைகள் அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

யாழ்.நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் 10 பெப் 2025 திங்கட்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

இந்திய குடியரசு தினமான கடந்த 26ஆம் திகதி யாழ்.இந்திய துணைத் தூதரகத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்பதற்கு செல்வதற்காக கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம் எனது வீட்டிற்கு வருகை தந்திருந்தார். அன்றையதினம் நானும், அவரும் சுகயீனமுற்றிருந்த சேனாதிராஜாவை நேரில் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்தோம்.

அப்போது அவருடைய உடல்நலன்கள் குறித்தே கலந்துரையாடினோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் அவருடன் கட்சி சார்ந்த விடயங்களையோ அரசியல் சார்ந்த விடயங்களையோ பேசியிருக்கவில்லை.

மேலும் அவர் எம்முடன் அன்னியோன்யமாகவே உரையாடினார். அவரது உடல்நலக்குறைவை பொருட்படுத்தாது நாம் விடைபெற்ற போது எம்மை வழியனுப்பி வைப்பதற்காகக் கூட அவர் வரமுன்றிருந்தார். அவ்விதமான நிலைமைகள் இருக்கின்ற போது எமக்கு எதிராக விசமத்தனமான பிரசாரம் செய்யப்படுகின்றது.

குறிப்பாக, சசிகலா ரவிராஜ் உள்ளிட்டவர்கள் கூட நாம், சேனாதிராஜாவுக்கு அழுத்தங்களை பிரயோகித்தோம் என்ற தொனிப்பட கருத்துக்களை ஊடகங்களில் பதிவிட்டுள்ளமையானது வருத்தமளிப்பதாக உள்ளது.

இதனையடுத்து எமது கட்சியின் மத்திய குழுவின் அங்கத்தவர்களான 18பேரின் புகைப்படங்களுடன் கூடி பதாகையொன்று சேனாதிராஜாவின் இறுதிச்சடங்கு நடைபெற்ற மயானத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அதில் நாம் தான் சேனாதிராஜாவின் மரணத்துக்கு காரணமானவர்கள் என்ற அடிப்படையில் வசனங்களும் எழுதப்பட்டிருந்தது.

அந்தப் பாதாகை சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாரிடத்தில் முறைப்பாடு செய்துள்ளேன். அது மட்டுமன்றி, இந்த விடயங்களுக்குப் பின்னால் கட்சியில் உள்ளவர்கள் மட்டுமல்ல எமக்கு எதிரான கட்சிகளில் உள்ளவர்கள்,



புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ளவர்கள் உள்ளிட்ட பல சக்திகள் உள்ளன. இந்தச் சக்திகள் தமிழரசுக்கட்சியை பிளவடையச் செய்ய வேண்டும் அல்லது அரசியல் அரங்கிலிருந்து ஒதுக்க வேண்டும் என்று செயற்படுகின்ற தரப்புக்களாகும். ஆகவே இந்த விடயங்கள் சம்பந்தமாக உண்மைகள் கண்டறியப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்ற போது பின்னணியில் உள்ளவர்கள் அடையாளப்படுத்தப்படுவார்கள். சேனாதிராஜாவுக்கும், எனக்கும் இடையில் எவ்விதமான தனிப்பட்ட முரண்பாடுகளும் கிடையாது. என்றார்.

# போதைப் பொருள் பாவனை:- 4 மாதத்தில் 17 பொலிஸ் அதிகாரிகள் பணி நீக்கம்!



போதைப்பொருள் பாவனை குற்றச்சாட்டின் பேரில் கடந்த நான்கு மாதங்களில் மொத்தமாக 17 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். போதைப்பொருள் பாவிக்கும் பொலிஸ் அதிகாரிகளின் பட்டியல் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் விசேட பொலிஸ் பிரிவினூடாக அடையாளம் காணப் பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்ட அதிகாரிகள் கண்காணிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். அவ்வாறான உத்தியோகத்தர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, போதைப் பொருளை பயன் படுத்தியமை உறுதிப்படுத்தப்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். போதைப் பொருள் பாவனையில் குற்றம் சாட்டப்பட்ட எந்தவொரு பொலிஸ் அதிகாரிகளுக்கும் மன்னிப்போ அல்லது இரண்டாவது வாய்ப்போ வழங்கப்பட மாட்டாது என குறிப்பிட்டார்.

# லந்தாவின் வாகனச்சாரதியைக் கடத்தியவர் வாகனத்தைப் பின் தொடர்ந்தவர், நாட் குறிப்பை அழித்தவர் என மூவரையும் விடுதலை செய்ய முயற்சி?

லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பான விசாரணைகளை சிதைப் பதற்கான முயற்சிகள் இடம் பெறுவ தாக தகவல்கள் வெளியாகியுள்ளன. லசந்தவை கொலை செய்தவர்கள் அரச ஆயுதாரிகளே என பல வட்டார ங்கள் தெரிவிக்கின்றன இன்று வரை அரசாங்க சார்பு சக்திகள் அவர்களிற்கு ஆதரவை வழங்கி வருவதுடன் விசார ணைகளை குழப்ப முயன்று வருகின் றன.

15வருடங்களிற்கு முன்னர் இடம் பெற்ற லசந்தவிக்கிரமதுங்க படு கொலையுடன் இராணுவத்தின் திரி போலி படையணிக்கு தொடர்புள்ள தாக பரவலாக நம்பப்படுகின்றது. ஆரம்பத்திலிருந்து இந்த படுகொலை கள் குறித்த விசாரணைகளை குழப்பு வதற்கு ராஜபக்ச அரசாங்கம் முயற்சி களை மேற்கொண்டிருந்தது.

லசந்த விக்கிரமதுங்க சுட்டுக்கொல்லப் பட்டார் என நீதித்துறை அதிகாரி யொருவர் போலியான பொய்யான முடிவிற்கு வந்திருந்தார். எனினும் பின்னர் லசந்தவிக்கிரமதுங்க கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்பது நிரூபிக்கப்பட்டது.

ஊடகங்கள் இந்த விவகாரத்தை திசை திருப்புவதற்காக வேறுவேறு கதை களையும் வெளியிட்டன. லசந்தவை பின்தொடர்ந்தவர்கள் பயன்படுத்திய வாகனங்களின் இலக்கங்கள் மூலம் அவர்கள் திரிபோலி பிரிவை சேர்ந்தவர் கள் என்பது பின்னர் தெரியவந்தது.

படுகொலை இடம்பெற்ற தினத்தன்று குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங் களை பயன்படுத்தி உரையாடிய இராணுவ வீரர்கள் குறித்த விபரங் களை இராணுவம் இன்றுவரை வழங்க வில்லை.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தில் லசந்த விக்கிரமதுங்க படுகொலையாளி கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என உறுதியளித்திருந்தது. விசா ரணை செய்யப்பட வேண்டிய குற்றங் களின் பட்டியலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தீர்மானித்தவேளை லசந்த விக்கிரமதுங்க படுகொலையே முதலா வதாக காணப்பட்டது.

லசந்த கொலை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தற்போதைய ஜனாதிபதி மீண்டும் மீண்டும் உறுதிமொழி வழங்கியிருந் தார். எனினும் தற்போது என்ன நடைபெறப்போகின்றது என்றால் லசந்த விக்கிரமதுங்க படுகொலை குறித்த ஆதாரங்களை மறைத்து விட்டு மூன்று சந்தேக நபர்களை விடுதலை செய்யப் போகின்றனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு ஜனவரி 27ம் திகதி கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ள சட்டமா அதிபர் பரிந்து ரணசிங்க லசந்த விக்கிரம துங்க படுகொலை சந்தேகநபர்களான பிரதிப்பொலிஸ்மா அதிபர் பிரசன்ன நாணயக்கார பணி நீக்கம் செய்யப் பட்ட பொலிஸ் பரிசோதகர் திஸ்ஸ சுகந்தபாலஇ இராணுவபுலனாய்வு பிரிவின் சார்ஜன்ட் மேஜர் உதலாகம ஆகியோரை விடுவிக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஆனந்த உதலகம இராணுவ புலனா ய்வு பிரிவின் சார்ஜன்ட் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப் பட்ட பின்னர் தன்னை கடத்தியவர் இவர் என லசந்தவின் வாகனச்சாரதி அடையாளம் காட்டியிருந்தார்.

2016ஜீலை மாதம் 7ம் திகதி கல்கிசை மேலதிக நீதவான் லோச்சன வீரசிங்க முன்னிலையில் இடம் பெற்ற அணி வகுப்பில் லசந்தவின் சாரதி இவரை அடையாளம் காட்டினார்.

லசந்தவிக்கிரமதுங்கவின் கொலையில் கோட்டாபய ராஜபக்சவிற்கு தொடர்புள் ளது என தெரிவித்த லசந்தவின் வாகனச்சாரதியை கடத்தி மௌனமாக யிருக்க வேண்டும் என எச்சரித்துள் ளார். இல்லாவிட்டால் லசந்தவிற்கும் நடந்ததே அவருக்கும் நடக்கும் என எச்சரித்திருந்தனர்.

பொலிஸ் பரிசோதகர் திஸ்ஸசுகந்தபால



– கல்கிசை பொலிஸின் குற்றதடுப்பு பிரிவின் தலைமை பொலிஸ் அதிகாரி– லசந்த விக்கிரமதுங்க தனது குறிப் பேட்டில் தனது வாகனத்தை மோட் டார் சைக்கிளில் இவர் பின்தொடர்ந் தார் என குறிப்பிட்டிருந்தார்.

கொலைகாரர்களை அடையாளம் காண்பதற்கு இது ஒரு முக்கியமான ஆதாரமாக காணப்பட்டது. சட்டமா அதிபர் விடுதலை செய்யுமாறு பரிந்துரைத்துள்ள பிரதிபொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்கார திசாரி சுகபாலவிடமிருந்து லசந்த விக்கிரம துங்கவின் குறிப்பேட்டை பெற்று அதனை அழித்தவர் .

லசந்த விக்கிரமதுங்கவிற்கு நடந்தது உனக்கும் நடக்க வேண்டுமா என பிரசன்ன நாணயக்கார மிரட்டியிரு ந்தார். மோட்டார் சைக்கிள் விபரங் களை பதிவு செய்து அதனை மறைத்து வைத்திருந்தார் – அதனை பின்னர் சிஐடியினர் கண்டுபிடித்தனர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் மீண்டும் சிஐடியினர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ள இந்த தருணத்தில் சட்டமா அதிபரிட மிருந்து இவ்வாறான அறிவித்தல் வெளியாகியுள்ளமை குறித்து பொலிஸ் திணைக்களம் அதிர்ச்சியடைந்துள்ள னது.

இந்த உத்தரவை சட்டமாஅதிபர் திணைக்களத்தின் பிரதிசொலிசிட்டர் ஜனத்த பண்டார பிறப்பித்துள்ளார் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவருக்கு ஆதரவாக உள்ளவர் கோட்டாபய ராஜபக்சவின் சட்டத் தரணி 2021ம் ஆண்டு ஆகஸ்ட் 8ம் திகதி அவ்வேளை சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஸ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரலாக பணியாற்றிய ஜனத்த பெரேரா 11 இளைஞர்கள் படுகொலை தொடர்பில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரணா கொடவிற்கு எதிராக தாக்கல் செய்யப் பட்ட வழக்கு விலக்கிக்கொள்ளப் படுவதாக அறிவித்திருந்தார். இவரே இந்த வழக்கை நீண்டகாலமாக கையாண்டு வந்தார்.

# தையிட்டி விகாரையை அகற்ற முடியாது! -அமைச்சர்




தையிட்டியில் அமைந்துள்ள விகாரையை அந்த இடத்தில் இருந்து அகற்ற முடியாது. அந்த விகாரை எந்தக் காணியில் அமைக்க ப்பட்டுள்ளதோ அந்தக் காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணி வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என புத்தசாசன, சமய மற்றும் கலா சார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனெவி தெரிவித் தார்.

நாட்டில் அமைந்துள்ள எந்த மதத் தலங்களையும் அகற்ற முடியாது. அது மத ரீதியான, இன ரீதியான வன்முறைகளுக்கே வழிவகுக்கும். மதத் தலங்களை வைத்துக்கொண்டு அரசியல் செய்வதை கட்சிகள் உட னடியாக நிறுத்த வேண்டும்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் ஏற்கனவே நேரில் பேச்சு நடத்தியுள்ளார். அவர்கள் இணக்கமான தீர்வுக்கு வர சம்மதம் தெரிவித்துள்ளார்கள். பலர் மாற்றுக் காணிக்குச் சம்மதம் தெரிவித்துள் ளார்கள். இந்நிலையில், காணி உரிமையாளர்களைத் திசை திருப்பி அவர்களைத் தங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குப் பயன்படுத்தச் சிலர் முற்படுகின்றனர். என்றார்.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணம், தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ ராஜமகா விகாரையில் தமிழர்கள் எவரும் கைவைக்க இடமளிக்க மாட்டோம் என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைந் துள்ள திஸ்ஸ ராஜமகா விகாரை சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்த மானது. இந்த விகாரை அமைந் துள்ள காணியும் தற்போது விகாரை நிர்வாகத்துக்கே உரித்தானது.

எனவே இந்த விவகாரம் தொடர்பில் கதைப்பதற்குத் தமிழ் மக்களுக்கும், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்



கும் எந்த அருகதையும் கிடையாது.

தையிட்டி திஸ்ஸ ராஜமகா விகா ரையை இடிக்க வேண்டும் என்று கூச்சலிடும் தமிழ் அரசியல்வாதி களுக்கு இந்த விடயங்களைத் தெரி வித்துக் கொள்கின்றோம்.

இந்த விகாரையில் தமிழர்கள் எவரும் கைவைக்க இடமளிக்க மாட்டோம். இந்த விகாரைக்கு எதிராகப் பௌர்ணமி தினத்தன்று தமிழர்கள் போராட்டம் நடத்தி எம்மை மிரட்ட முடியாது. என்றார்.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவணைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

01 பெப்ரவரி 2025 - 14 பெப்ரவரி 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி துஷியந்தி நவநாதன்

யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 13 பெப்ரவரி 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, செஞ்சோலை ஆகிய மூன்று இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா கணேசமூர்த்தி

நாவலி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா கணேசமூர்த்தி அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு நாள் 02 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கந்தையா கணேசமூர்த்தி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்தி க்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பொன்னையா தம்பையா

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகக் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாள் 06 பெப்ரவரி 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு பொன்னையா தம்பையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஸ்ரீதரன் கிருஷ்ணவேணி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 16 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாள் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி கிருஷ்ணவேணி ஸ்ரீதரன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தவேந்திரராணி தேவரத்தினம்

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களது 12வது ஆண்டு நினைவுநாள் 06 பெப்ரவரி 2025 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தவேந்திரராணி தேவரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றார்கள். "நல்லதை நினை நடப்பது நடக்கும்"

## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி அவர்களது 13வது ஆண்டு நினைவுநாள் 04 பெப்ரவரி 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக் கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி பிரசாந்தி அருச்சுனன்

வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடா Northyorkஐ வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களது மூன்றாவது ஆண்டுத் திதி நினைவு நாள் 10 பெப்ரவரி 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வி பிரசாந்தி அருச்சுனன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



01 பெப்ரவரி 2025 சனிக்கிழமை கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திருமதி பரமலிங்கம் பராசக்தி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி பரமலிங்கம் பராசக்தி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



02 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை நவாலி மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா கணேசமூர்த்தி அவர்களது முதுலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



04 பெப்ரவரி 2025 செவ்வாய்க்கிழமை யாழ்.இணுவிலைச் சேர்ந்த திருமதி தங்கரெத்தினம் நல்லதம்பி அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



04 பெப்ரவரி 2025 செவ்வாய்க்கிழமை கனடா Exevitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



05 பெப்ரவரி 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சாந்தகுமார் ஜெயராணி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அகத்தியனின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் அகத்தியன் தனது பெற்றோர், உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




06 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தபேந்திரராணி தேவரத்தினம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




06 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை அனலைதீவு – கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி டனிதா விக்கினேஸ்வரபாலன் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




06 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை அனலைதீவு – கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி டனிதா விக்கினேஸ்வரபாலன் அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




06 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னையா தம்பையா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



07 பெப்ரவரி 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி வர்ஷிகா சோமாஸ்கந்தன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்




07 பெப் 2025 வெள்ளிக்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சுப்பிரமணியம் சரோஜினி இணையர்களது 56வது திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்.



09 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கிருஷாந் நித்தியா இணையர்களது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




10 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கோகுலன் நந்தகுமாரின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கோகுலன் தனது பெற்றோர், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



10 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி தியாரா ரகுமாறன் செல்வன் சகாஜன் ரகுமாறன் சகோதரங்கள் தமது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி  இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




10 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி தியாரா ரகுமாறன் செல்வன் சகாஜன் ரகுமாறன் சகோதரங்கள் தமது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்

# பாரதிய ஜனதாவின் உள்நாட்டு அரசியல் நிகழ்ச்சி நிரலினால் களங்கமாகும் இந்திய வெளியுறவுக் கொள்கை நோக்கு

தெய்வப்புலவர் திருவள்ளுவரை கௌரவிக்குமுகமாக யாழ்ப்பாணம் கலாசார மையத்தை திருவள்ளுவர் கலாசாரம் மையம் என்று பெயர் மாற்றம் செய்வதாக ஜனவரி 18 ஆம் திகதி கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் எக்ஸ் சமூக ஊடகத்தில் பதிவொன்றைச் செய்து அறிவித்தது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றில் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவும் இலங்கையின் புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவியும் கூட்டாக புதிய பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தனர். இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரும் இத்திய உயர்ஸ்தானிகரகத்தின் எக்ஸ் பதிவை மீள்பதிவு செய்து பெயர் மாற்றத்தை பாராட்டியிருந்தனர். தமிழ்நாடு ஆளுநர் ஆர். என் ரவியும் அதைப் புகழ்ந்தார்.

இவ்வாறு தான் தொடங்கியது அயல் நாடுகளின் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாததாக புதுடில்லி எவ்வாறு மாறிவிட்டது என்பதையும் பாரதிய ஜனதா கட்சியின் உள்நாட்டு நிகழ்ச்சி நிரலினால் இந்திய வெளியுறவுக் கொள்கை நோக்கு எவ்வாறு மங்கலாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மீண்டும் ஒரு தடவை காண்பித்த நாடகம். அத்தகைய நோக்கின் விளைவாக புதுடில்லி அதன் நீண்டகால நண்பர்களையும் செல்வாக்கையும் இழப்பதுடன் பிராந்தியத்தில் செய்த நல்ல காரியத்தையும் கெடுத்துவிட்டது.

யாழ்ப்பாண கலாசார மையம் போரினால் அழிவுகளுக்கு உள்ளான வட இலங்கைக்கு இந்தியாவிடமிருந்து கிடைத்த ஒரு கோடி 20 இலட்சம் டொலர்கள் பெறுமதியான ஒரு தனித்துவமான கொடையாகும். 2011ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டு 2021 ஆம் ஆண்டில் நிர்மாணித்து முடிக்கப்பட்ட நவீன கேட்போர் கூடம் ஒன்றுடன் கூடிய 11 மாடி கட்டிடமே யாழ்ப்பாணக் குடாநாட்டின் மிகவும் உயரமான ஒரேயொரு கட்டிடமாகும்.

யாழ்ப்பாணம் கலாசார மையத்தை நிருவகித்து பராமரிப்பதற்காக மாநகர சபையிடம் நிதி இருக்கவில்லை என்பதால் அதற்கான நிதியை ஐந்து வருடங்களுக்கு வழங்குவதற்கு இந்தியா இணங்கிக் கொண்டது. கலாசார மையம் 2023ஆம் ஆண்டில் அன்றைய இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் யாழ்ப்பாண மக்களிடம் முறைப்படி கையளிக்கப்பட்டது.

ஆகவே எங்கிருந்து திருவள்ளுவர் இங்கே வருகிறார்? சங்ககால தமிழ் தத்துவப் பலவரான திருவள்ளுவரை உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் போற்றி வணங்குகிறார்கள். தமிழ்நாட்டில் ஊடுருவுவதில் நாட்டம் கொண்டிருக்கும் பாரதிய ஜனதா கட்சி அந்த மாநிலத்தில் திருவள்ளுவரை காவி மயப்படுத்த முயற்சிக்கின்றது.

2024 லோக்சபா தேர்தல்களில் பெரிய வெற்றியைப் வெற்றியைப் பெறும் நம்பிக்கையில் பாரதிய ஜனதா அதன் தேர்தல் அறிக்கையில் உலகளாவ திருவள்ளுவர் கலாசார மையங்களை நிறுவும் உறுதிமொழியையும் உள்ளடக்கியது. பாரத்தின் செழுமையான கலாசாரத்தை உலகிற்கு காட்டுவதும் ஜனநாயகத்தின் தாய் என்ற வகையில் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த பாரத்தின் ஜனநாயக பாரம்பரியத்தை மேம்படுத்துவதுமே நோக்கம் என்றும் அதில் கூறப்பட்டது.

கடந்த வருடம் செப்டெம்பரில் சிங்கப்பூருக்கு விஜயம் செய்த மோடி முதலாவது திருவள்ளுவர் கலாசார மையத்தை இந்தியா அந்த நாட்டில் நிறுவும் என்று அங்குள்ள தமிழர்கள் மத்தியில் உறுதியளித்தார். பிரதமரின் அந்த அறிவிப்பை புகழ்ந்து முதலில் பாராட்டியவர்களில் தமிழ்நாடு பாரதிய ஜனதா தலைவர் கே. அண்ணாமலையும் ஒருவர். நிதிச் சிக்கல் மற்றும் காலவரிசை காரணமாகப் போலும் அந்த திட்டம் பிறகு மாற்றப்பட்டது. தமிழ்நாடு சட்டசபை தேர்தல்கள் 2026 மே மாதத்தில் நடைபெறவிருக்கின்றன. அந்த குறுகிய காலப்பகுதியில் புதிதாக திருவள்ளுவர் கலாசார மையம் ஒன்றை நிர்மாணிப்பது சாத்தியமாகப் போவதில்லை. ஆனால், ஏற்கெனவே நிர்மாணிக்கப்பட்ட கலாசார மையம் ஒன்று கைவசம் இருக்கிறது.




இவ்வாறு தான் வெளிநாட்டில் திருவள்ளுவர் கலாசார மையத்தை அமைப்பது என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படும் முதலாவது இடமாக இலங்கையின் யாழ்ப்பாணம் மாறியது. இலங்கை பத்திரிகையாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் அதை உடனடி நூடில்ஸ் போன்று உடனடி திருவள்ளுவர் கலாசார மையம் ' என்று வர்ணித்தார். யாழ்ப்பாணம் கலாசார மையத்தின் பெயரை மாற்றும் தீர்மானம் கொழும்பு இந்திய உயர்ஸ்தானிகரகத்துக்கு புதுடில்லியில் இருந்து பிரதமர் அலுவலகத்தினால் அறிவிக்கப்பட்டது.

எதிர்ப்புக் கிளம்பியபோது புதுடில்லி அதிர்ச்சியடைந்தது. கலாசார மையத்துக்கு வைக்கப்பட்ட முதல் பெயர் ஆழ்ந்து ஆராயந்து தெரிவு செய்யப்பட்டது. இலங்கை தமிழ் சிறுபான்மையினத்தவர்கள் யாழ்ப்பாணத்தை தமிழ் வடக்கு, கிழக்கின் வரலாற்று மற்றும் கலாசாரத்தின் இதயமாக நோக்குகிறார்கள். 30 வருடகால உள்நாட்டுப் போரில் யாழ்ப்பாணம் பெரும்பாலும் நிர்மூலம் செய்யப்பட்டது. 1983 ஆம் ஆண்டில் இனமோதல் மூளுவதற்கு முன்னதாக சிங்களக் குண்டர்கள் யாழ்ப்பாண பொது நூலகத்தை தீ வைத்துக் கொளுத்தினர். ஆயிரக் கணக்கான நூல்களும் கையெழுத்துப் பிரதிகளும் தீயில் பொசுங்கின.

இனப் போரின் போது பெருமளவு தமிழர்கள் நாட்டில் இருந்து வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தாலும், யாழ்ப்பாணம் தமிழ் அரசியலினதும் அடையாளத்தினதும் மையமாக தொடர்ந்து நிலைத்திருக்கிறது. வானளாவ உயர்ந்து நிற்கும் கலாசார மையம் இலங்கையில் ஒரு காலத்தில் உச்சத்தில் இருந்த தமிழ் கலாசாரத்தினதும் இனமோதலின் பாதிப்புக்களில் இருந்து மீட்சிபெற்று மீண்டும் அந்த உச்சத்தை மீண்டும் அடைவதில் தமிழ்ச் சமூகம் கொண்டிருக்கும் திடசங்கற்பத்தினதும் ஒரு சின்னமாக விளங்குகிறது.

திடீரென்று செய்யப்பட்ட பெயர் மாற்றம் மக்களை சீற்றமடைய வைத்தது. யாழ்ப்பாணப் பிரதிநிதி எவருடனும் குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்களில் எவருடனும் அல்லது ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்கவின் அமைச்சரவையில் உள்ள தமிழரான இராமலிங்கம் சந்திரசேகருடனும் கூட பெயர் மாற்றம் குறித்து கலந்தாலோசிக்கப்படவில்லை. பெயர் மாற்ற வைபவத்தில் கலந்து கொண்ட சந்திரசேகர் தனக்கு பெயர் மாற்றம் குறித்து முன் கூட்டியே தகவல் எதுவும் தெரியாது என்று தெரிவித்ததாக கூறப்பட்டது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதைப் போன்று மாற்றம் செய்யப்பட்ட பெயர்ப்பலகையில் ஆங்கிலத்துக்கும் சிங்களத்தக்கும் அடுத்ததாகவே தமிழ் இடம்பெற்றது.

தமிழ் அடையாளத்துக்கு யாழ்ப்பாணத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி முதலில் ஆத்திரத்துடன் அறிக்கை வெளியிட்ட முக்கியமான அரசியல்வாதி முன்னாள் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே ஆவார்.

மக்கள் மத்தியில் சீற்றம் அதகரிக்கவே தமிழர்களின் இரண்டாவது பழம்பெரும் அரசியல் கட்சியான இலங்கை தமிழரசு கட்சி கலாசார மையத்தின் பெயர் மாற்றம் தொடர்பில் அதன் வேதனையை' வெளிப்படுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவருக்கு கடிதம் ஒன்றை எழுதியது. தாங்கள் எதிர்ப்பது திருவள்ளுவரை அல்ல என்று சுட்டிக்காட்டிய தமிழரசு கட்சி தமிழ் அடையாளத்தின் சின்னம் என்ற வகையில் யாழ்ப்பாணம் மதிப்பு மிக்கது என்றும் அந்த பெயர் மீணடும் பொறிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

யாழ்ப்பாணத்தில் தோன்றிய நிலைவரத்தை புதுடில்லியில் உள்ளோர் இறுதியில் விளங்கிக் கொண்டனர். என்றாலும், முற்றுமுழுதாக விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. ஒரு விட்டுக் கொடுப்பாக ' திருவள்ளுவர் கலாசார மையம், யாழ்ப்பாணம் ' என்று பெயரை வைக்கலாம் என்று கொழும்பில் உயர்ஸ்தானிகரகத்தின் இராஜதந்திரிகள் முதலில் யோசனை கூறினர்.

ஆனால், அவ்வாறு பெயரைப் பொறிப்பது யாழ்ப்பாணம் என்பது வெறுமனே கலாசார மையத்தின் விலாசம் போன்ற தோற்றத்தைக் கொடுப்பதாக அமையும் என்று தமிழ்த்தரப்பு ஆட்சேபித்தது.

பிறகு அவர்கள் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம் ' என்று பெயரைப் பொறிப்பதற்கு இணங்கினார்கள். ஆனாலும், இந்தியாவின்' பெரிய அண்ணன் மனோபாவம் தொடர்பில் எரிச்சலுடனேயே இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டுடனான பொதுவான இனத்துவ மற்றும் கலாசாரப் பிணைப்புகளின் விளைவாக இந்தியாவுடன் வரலாற்று ரீதியாக நெருக்கமானவர்களாக இருந்து வரும் இலங்கை தமிழர்களை வசப்படுத்துவதற்கு சீனா முயற்சிகளை செய்து வருகின்ற ஒரு நேரத்தில் கலாசார மையம் தொடர்பான சர்ச்சை தோன்றியது கவனிக்கத்தக்கது.

தமிழ்த் தீவிரவாதத்துக்கு ஆதரவளிப்பதற்கு எடுத்த தவறான ஒரு தீர்மானம் மற்றும் அதிகாரப் பரவலாக்கத்துக்காக அரசியலமைப்பு திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு தலையீடு செய்தது உட்பட இலங்கை தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்கான போராட்டத்தை இந்தியா ஆதரித்தது.

கட்டுரையாளர்
இந்தியாவில் இருந்து
நிருபமா சுப்பிரமணியன்



ஆனால், உறவுமுறைசுமுகமானதாக இருக்கவில்லை. சிங்கள அரசியல் சமுதாயத்தின் மீதான சீனாவின் செல்வாக்கு தொடர்பிலான கரிசனையின் விளைவாக கொழும்புடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொள்வதற்காக புதுடில்லி தமிழர் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பதனால் தமிழர்கள் அதிருப்தியும் ஏமாற்றமும் அடைந்திருக்கிறார்கள். இலங்கை கடற்பரப்பில் பெருமளவில் இழுவைப் படகுகளை பயன்படுத்தி தமிழ்நாட்டு மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருவது யாழ்ப்பாணத்தில் இந்தியாவுக்கு எதிரான உணர்வுகள் கடுமையாக இருப்பதற்கு காரணமான இன்னொரு பிரச்சினையாகும்.

இந்திய குடியரசு தினத்தன்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் ஏற்பாடு செய்த நிகழ்வில் உரையாற்றிய துணைத் தூதுவர் ' எந்த நேரத்திலும் இலங்கை தமிழ் மக்கள் கதவைத் தட்டக்கூடிய ஒரு நட்புநாடு இந்தியா' என்று கூறினார்.

தமிழ் மக்களுடன் நிற்பதற்காக இருதரப்பு உறவுகளுக்கு அப்பால் இந்தியா சென்றது என்று கூறிய அவர்' தமிழ் மக்கள் தங்களது நண்பர்கள் யார், தங்களுக்கு எதிரானவர்கள் யார் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சில தீர்மானங்கள் வேறுபாடு களை தோற்றுவித்திருந்தன என்ற போதிலும், யாழ்ப்பாண துணைத் தூதரகம் மக்களின் நலன்களையும் நல்வாழ்வையுமே மனதிற் கொண்டிருக்கும் என்றும் அவர் உறுதியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(டெக்கான் ஹெரால்ட்)

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்





10 பெப்ரவரி 2025 திங்கட்கிழமை வேலணையைப் பிறப்பிடமாகவும் Northyork கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வி பிரசாந்தி அருச்சுசன் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





11 பெப்ரவரி 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுதாகரன் சாமினி இணையர்கள் தைப்பூசத் திருநாள் உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




13 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




13 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




13 பெப்ரவரி 2025 வியாழக்கிழமை யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




29 ஜனவரி 2025 புதன்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கராணி சடாச்சரசுந்தரம் அவர்களது 17வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! பெப்ரவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



CANADA HINDU MAAMANTRAM
கனடா இந்து மாமன்றம்

## கனடா இந்து மாமன்றம் சுவையுடன் படைத்திடும்
# சர்க்கரைப் பொங்கல் விழா - 2025
## சமய அறிவு, பேச்சு, பண்ணிசைப் போட்டிகள்

இடம்: SRI SATHYA SAI BABA CENTRE OF SCARBOROUGH
5321 Finch Ave East, Scarborough ON. M1S 5W2

காலம்: **March 22, 2025 (Saturday) 9.00 AM**

**போட்டிகளுக்கு உரிய பிரிவுகள்:**

| | |
|---|---|
| மழலைகள் (JK) | : 01-01-2020 இற்குப் பின் பிறந்தோர் |
| ஆரம்பப் பிரிவு (SK) | : 2019 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 1 (Gr.1) | : 2018 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 2 (Gr.2) | : 2017 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 3 (Gr.3) | : 2016 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 4 (Gr.4) | : 2015 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 5 (Gr.5) | : 2014 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 6 (Gr.6) | : 2013 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 7 (Gr.7) | : 2012 ஆம் ஆண்டில் பிறந்தோர் |
| பிரிவு 8 (Gr.8) | : 2011 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்பும் பிறந்தோர் |

❋ மாற்றுத் திறன் மாணவர்களுக்கான சிறப்புப் போட்டிகள் தனிப்பிரிவாக நடாத்தப்படும்.

குறிப்பு:

1. சமய அறிவுப் போட்டிகள் பிரிவு 4ம் அதற்கு மேல் உள்ள பிரிவுகளுக்கு மட்டும் இடம்பெறும். கீழ்ப் பிரிவு மாணவர்கள் விரும்பினால் 4வது பிரிவில் பங்குபற்றலாம்.
2. புதிய பாடத்திட்டத்தின்படி போட்டிகள் இடம்பெறும். விபரங்களை, தரப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டியாளர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைப் போட்டியின்போது கொண்டுவரல் வேண்டும்.
4. மேற்கண்ட போட்டிகளில் பங்குபற்ற ஒரு போட்டியாளருக்கு $5.00 அறவிடப்படும்.
5. **ஏப்பிரல் 27, 2025**ல் நடைபெறும் சர்க்கரைப் பொங்கல் விழாவில் போட்டிகளில் பங்கு பற்றிய மாணர்களைப் பாராட்டி பரிசில்கள் வழங்கப்படும்.

**மார்ச்சு 05, 2025க்கு முன் தரவேண்டிய தகவல்கள்:**

முதல் பெயர்: ..............................

குடும்பப் பெயர்: ..............................

பிரிவு: ..............................

பிறந்த திகதி: ..............................

தொலைபேசி எண், email: ..............................

..............................

பங்குகொள்ளும் போட்டிகள்:

☐ பேச்சு ☐ பண்ணிசை ☐ சமய அறிவுப் போட்டி

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
Secretary,
Canada Hindu Maamantram,
41, Longbow Sq, Scarborough, ON. M1W 2W6
email: canhinduma@gmail.com

மேலதிக தொடர்புகளுக்கு: 416.497.4741
647.620.5171, 416.356.7323
647.992.0587, 905.785.6526

**விண்ணப்ப முடிவு திகதி: மார்ச்சு 05, 2025**

AYUR CARE
KERALA AYURVEDA MASSAGE & THERAPY

# வலி நிவாரண

உத்தரவாதம்


ஐந்து அமர்வுகளில்

@கட்டுப்படியான $விலையில்






கழுத்து மற்றும் தோள்பட்டைவலி
முதுகு வலி
முழங்கால் வலி
கால் வலி
கை வலி




உங்களை இயற்கையுடன் ஒன்றி வாழுங்கள்

**எங்கள் சேவைகள்**

- தலை மசாஜ்
- நீராவி குளியல்
- ஓய்வெடுத்தல்
- அரோமா மியூசிக் தெரபி
- தியானமும் புத்துணர்ச்சியும்
- **முழு உடல் மசாஜ் மற்றும் நிராவி குளியல்**

BOOK NOW
647-278-3846

240 ALTON TOWER CIRCLE,
UNIT 301, SCARBOROUGH,
ON M1V 4P2 VIA MCCOWAN RD.

ayurcaretoronto@gmail.com

சிவமயம்



# ஸ்ரீ கைலாசம்
## சைவசமய கிரியைகள் சேவை

**சமயதீட்சை**

**அந்திமக்கிரியை** (மரணச்சடங்கு)

**அந்தியேட்டி** (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
**சைவக்குருக்களை**
தொடர்பு கொள்ளவும்
**“இணுவில் திருவூர்”**
**சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்**
**647.629.5468**
msvkurukkal@gmail.com

# தையிட்டி விகாரை:- என்ன செய்யலாம்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



தையிட்டி விகாரை ஒரு தனியார் காணியில் கட்டப்படுகிறது என்பதனால் அது சட்டவிரோதமானது என்று கூறி அதனை ஒரு சட்ட விவகாரமாக மட்டும் குறுக்குவது தமிழ் மக்களுக்குப் பொருத்தமானது அல்ல. அது சட்டப் பிரச்சினை மட்டுமல்ல, அதை விட ஆழமான பொருளில் அது ஓர் அரசியல் விவகாரம். இன ஒடுக்குமுறையின் ஆகப் பிந்திய வெளிப்பாடுகளில் ஒன்று. அது ஓர் ஆக்கிரமிப்பு. ஒரு மரபுரிமைப் போர். இலங்கைத் தீவின் சட்டங்கள் எவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராக வளைக்கப்படும் என்பதற்கு அது ஒரு சான்று. 2009க்கு பின்னரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப் படவில்லை என்பதற்கு அது ஒரு சான்று.

சம்பந்தப்பட்ட சில தமிழர்களின் காணி உரிமை பற்றிய ஒரு சட்டப் பிரச்சினையாக அதை அணுகி தனி நபர்களுக்குத் தீர்வு காண்பதன் மூலம் அதைத் தீர்த்து விட முடியாது. சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு காணியைக் கொடுத்தோ அல்லது காசைக் கொடுத்தோ அதைத் தீர்த்து விட முடியாது. அது 2009க்கு பின்னரான இன ஒடுக்குமுறையின் வெளிப்பாடுகளில் ஒன்று.எனவே அதற்குரிய தீர்வும் கூட்டுரிமைகளின் அடிப்படையில்தான் இருக்க வேண்டும்.

எனவே அந்த விடயத்தை அதற்குள்ள பல்பரிமாணத்தின் அடிப்படையில் தான் அணுக வேண்டும் முன் வைக்க வேண்டும். அதற்கு அரசியல் தீர்வுதான் தேவை.

தையிட்டி விகாரை வடக்கில் உள்ள மிகப்பெரிய கூட்டுப் படைத்தளத்தின் எல்லைக்குள் காணப்படுகிறது. படையினரால் கட்டப்படுகிறது. படையினரால் பாதுகாக்கப்படுகிறது. இலங்கைத் தீவில் தமிழ்ப் பகுதிகளில் அரச படைகளால் பாதுகாக்கப்படாத ஒரு பௌத்த விகாரையாவது உண்டா? அரச போகங்களைத் துறந்து பரி நிர்வாணம் அடைந்த அஹிம்சா மூர்த்தியான புத்த பகவானை இதை விடக் கேவலமாக அவமதிக்க முடியாது.

தமிழ் மக்கள் புத்த பகவானைப் புறத்தியாகப் பார்க்கவில்லை. தமிழ் மக்கள் மத்தியில் ஏற்கனவே பௌத்தம் இருந்திருக்கிறது. தமிழ் மொழியின் காப்பிய காலம் எனப்படுவது பௌத்த,சமண மதங்களின் காலம் தான். ஐம்பெரும் காப்பியங்களும் பௌத்த சமணக் காப்பியங்கள்தான். எனவே தமிழ் மக்கள் பௌத்தத்தை எப்பொழுதும் ஒரு பகை மதமாகக் கருதியது இல்லை.

தமிழ் மக்கள் மத்தியில் எப்பொழுதும் மதப் பல்வகைமை உண்டு. தமிழ்த் தேசிய வாதம் என்பது மதப் பல்வகைமையின் மீது தான் கட்டியெழுப்பப்பட வேண்டும். எனவே தமிழ் மக்கள் மதப் பல்வகைமைக்கு எதிரில்லை. ஆனால் ஒரு மதத்தை ஆக்கிரமிப்பின் கருவியாக பயன்படுத்தும் பொழுது தான் அது ஓர் அரசியல் விவகாரமாக மேல் எழுகிறது. இங்கு பிரச்சனை மதப் பல்வகைமை அல்ல. மத மேலாண்மை தான். தையிட்டி விகாரை என்பது மத மேலாண்மையின் ஆகப் பிந்திய குறியீடு. கிண்ணியாவில் ஒரு புத்தர் சிலையானது விவகாரமாக மேலெழுந்த பொழுது முஸ்லிம் கொங்கிரஸ் தலைவர் ரவூ ப் ஹக்கீம் கூறியது போல, புத்தர் சிலைகளை எல்லைக் கற்களாக நகர்த்தும் ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கை அது.

உள்ளூர் மக்களின் உணர்வுகளைப் பொருட்படுத்தாமல் படை மைய நோக்கு நிலையிலிருந்து படையினரால் கட்டப்பட்ட ஒரு விகாரை அது. ஒரு விதத்தில் இராணுவ மயமாக்கலின் குறியீடும் தான். எனவே அந்த விடயத்தில் ஆக்கிரமிப்பு ஒன்றை எப்படிக் கையாள்வது என்று தான் சிந்திக்கலாம். ஒரு வணக்கத் தலத்தை அகற்றலாமா என்ற கேள்வி வரும்.அ து மத உணர்வுகளைப் புண்படுத்தும் என்ற வாதம் முன் வைக்கப்படும். ஆனால் அதற்கு மதப்பரிமாணம் மட்டும் கிடையாது.

அதை விட ஆழமாக அதற்கு ஒரு படைப் பரிமாணம் உண்டு. படையினரால் வெற்றி கொள்ளப்பட்ட ஒரு நிலத்தில் அது கட்டப்படுகிறது. அதற்குள்ள படைப் பரிமாணம் தான் இங்கு பிரச்சனை. அது கட்டப்படும் பிரதேசம் பலாலி காங்கேசன் துறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கூட்டுப் படைத்தளப் பகுதி ஆகும். அப்பெருங் கூட்டுப் படைத்தளம்



உருவாக்கப்பட்ட பொழுது அங்கே ஏற்கனவே இருந்த இந்து, கிறிஸ்தவ மத வழிபாட்டிடங்கள் சுவடின்றி அழிக்கப்பட்டுள்ளன அல்லது சிதைக்கப்பட்டுள்ளன. அக்கூட்டுப் படைத்தளம் பெருப்பிக்கப்படுகையில் இந்து மற்றும் கிறிஸ்தவ மதப் பிரிவினரின் உணர்வுகள் மதிக்கப்படவில்லை.

தையிட்டி விகாரை அமைந்துள்ள பலாலி காங்கேசன்துறை கூட்டுப் படைத்தளப் பகுதிக்குள் மட்டும் சிறாப்பர் மடம், வைத்திலிங்கம் மடம்,சடையம்மா மடம், சுக்கிரதார திரிகோண சத்திரம் ஆகிய இந்து கட்டுமானங்கள் ஒரு காலத்தில் இருந்தன. சுக்கிரதார திருகோண சத்திரம் எனப்படுவது 1800களில் ஒரு சித்தரால் கட்டப்பட்டது. சூரிய உதயத்தை தரிசிக்கும் ஒரு வழிபாட்டு மையமாக அது இருந்தது. அப்பகுதி இப்பொழுது படையினரால் நிர்வகிக்கப்படும் தல்செவன சுற்றுலா விடுதிக்குள் விழுங்கப்பட்டு விட்டது.

கீரிமலையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைக்கு அருகே ஆதிச் சிவன் கோவில் காணப்பட்டது. அந்த மாளிகைக்குப் பின்பக்கம் உச்சிப் பிள்ளையார் கோயில் இருந்தது. அந்தச் சூழலில் பாதாள கங்கை என்று அழைக்கப்படும் வழிபாட்டு முக்கியத்துவம் மிக்க ஒரு தீர்த்தக் கிணறு இருந்தது.

அங்குள்ள கடற்படையினரின் படைத் தளப் பிரதேசத்துக்குள் முன்பு கதிரவெளி முருகன் கோவில் இருந்தது. அப்பகுதி மக்கள் கதிர்காம யாத்திரையை அங்கிருந்து தான் தொடங்குவதுண்டு. இவை இந்து மத வழிபாட்டிடங்கள். இவை போல கிறிஸ்தவ மத வணக்கத் தலங்களும் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, பலாலியில் இருந்த சென் செபஸ்டியன் தேவாலயம், மயிலிட்டியில் காணிக்கை மாதா தேவாலயம்.அந்தத் தேவாலயத்திற்கு அருகே இருந்த திருக்குடும்பக் கன்னிர் மடம், மயிலிட்டி கடற்கரையில் வேளாங்கண்ணி மாதா ஆலயம். போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.

தையிட்டி விகாரை கட்டப்பட்டு வரும் கூட்டுப் படைத்தளப் பிரதேசத்துக்குள் காணப்பட்ட ஏனைய மதக் கட்டுமானங்கள் இவை. இவை தொடர்பாக மதப் பெரியார்களும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டி வருகிறார்கள்.

இவ்வாறு போர்க்காலத்தில் கட்டியெழுப்பப்பட்ட ஒரு பெரும் படைத்தளத்துக்குள் ஏற்கனவே இருந்த பௌத்தம் அல்லாத மத வழிபாட்டு நிலையங்களை அழித்து விட்டு அல்லது சிதைத்து விட்டு அல்லது அப்பகுதிக்குள் பக்தர்கள் செல்வதற்கு அனுமதியை மறுத்து விட்டு, ஒரு விகாரையை




அங்கே கட்டுவது தான் இங்கு பிரச்சனை. சிங்கள பௌத்தம் அல்லாத ஏனைய வழிபாட்டிடங்களை தடயமும் இல்லாமல் அழிப்பது என்பது இலங்கைத்தீவின் நவீன அரசியல் வரலாற்றின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதியாகும். புழக்கத்தில் உள்ள வழிபாட்டிடங்கள் மட்டுமல்ல, தொல்லியல் அகழ்வாராய்ச்சிப் பிரதேசங்களில் உள்ள வழிபாட்டிடங்களையும் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் விட்டு வைக்க வில்லை.

அமெரிக்காவில் வசிக்கும் கலாநிதி சுஜாதா அருந்ததி மீகம என்ற புலமையாளர் தொல்லியல் அகழ்வாராய்ச்சிப் பிரதேசங்களில் எவ்வாறு இந்து மத மரபுரிமைச் சொத்துக்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்பதனைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.க லனித்துவ ஆட்சிக் காலத்தில் -19ஆம் நூற்றாண்டில் -பொலநறுவையில் நிகழ்ந்த அகழ்வாராய்ச்சி தொடர்பான அறிக்கைகளில் பல சிவாலயங்கள் பற்றிய குறிப்புகள் உண்டு என்றும் ஆனால் பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை விடுபட்ட பின் நிகழ்ந்த அகழ்வாராய்ச்சி அறிக்கைகளில் மேற்படி சிவனாலயங்கள் பலவற்றைப் பற்றிய குறிப்புக்கள் இல்லை என்றும் சுஜாதா அருந்ததி மீகம கூறுகிறார். இது முழுமுக்க ஒரு பண்பாட்டு இன அழிப்பு. இலங்கைத் தீவின் நவீன அரசியலின் ஒரு பகுதி அது. எனவே அந்த வரலாற்றுப் படிப்பினையின் அடிப்படையில் தான் தையிட்டி விகாரை பொறுத்து முடிவெடுக்கலாம். அதை அதற்குரிய அரசியல் பரிமாணத்தோடு தான் அணுக வேண்டும். தனியே மதத்துக்கு ஊடாகவோ அல்லது சட்டத்துக் கூடாகவோ மட்டும் அணுக முடியாது.அதற்கு அரசியல் தீர்வு தான் வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது இன முரண்பாடுகள் இல்லை என்று கூறுகிறது. ஆனால் அந்த விகாரை இன முரண்பாடுகளின் குறியீடு. 2009க்குப் பின் இனங்களுக்கிடையே, மதங்களுக்கு இடையே மொழிகளுக்கிடையே மெய்யான பொருளில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்கள் ஏற்படாத ஒரு வெற்றிடத்தில், சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பால் அதாவது யாப்பில் ஒரு மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசுக் கட்டமைப்பால் தமிழ் மக்களின் ஒப்புதலின்றி தமிழ்ப் பகுதிகளில் கட்டப்படும் பெரும்பாலான பௌத்த வழிபாட்டிடங்கள் ஆக்கிரமிப்பு உள்நோக்கமுடையவைகளே. எனவே ஓர் ஆக்கிரமிப்பை எவ்வாறு கையாள வேண்டும் என்றுதான் இங்கு சிந்திக்கலாம். அது ஒரு அரசியல் தீர்மானம்.

# மாற்றம் காணும் ஜெனிவா களம்!

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 24 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகப் போகிறது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இருந்து, அமெரிக்கா வெளியேறியுள்ள நிலையில் இந்தக் கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது. அமெரிக்காவில்



ஏற்பட்டிருக்கின்ற ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து, டொனால்ட் ட்ரம்ப் பல அதிரடியான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

அவரது இந்த செயற்பாடு, உலகம் முழுவதிலும் அதிர்வுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் நட்பு நாடுகளுக்கே, அவரது தீர்மானங்களும், செயற்பாடுகளும், நடுக்கத்தை தோற்றுவித்திருக்கிறது என்றால் மிகையில்லை. அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், ட்ரம்ப் இரண்டு முக்கியமான அறிவிப்புகளை வெளியிட்டார்.

ஒன்று, உலக சுகாதார நிறுவனத்தில் இருந்து வெளியேறுவது. அதனை நடைமுறைப்படுத்தும் உத்தரவில் ஏற்கெனவே கையெழுத்திட்டு விட்டார். இரண்டு, உலகளாவிய ரீதியாக அமெரிக்கா முன்னெடுக்கின்ற உதவித்திட்டங்களை, மூன்று மாதங்களுக்கு இடை நிறுத்தி வைப்பது.

இதையடுத்து, சர்வதேச ரீதியாக மனிதாபிமான உதவி பணிகளுக்கு அமெரிக்கா ஆண்டுதோறும் செலவிட்டு வரும் 40 பில்லியன் டொலர் நிதி இடை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிதி உதவிகளை வழங்கும், சுயாதீன அமைப்பான யூஎஸ்.எய்ட் அமைப்பும், டொனால்ட் ட்ரம்பினால் மூடப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு நடவடிக்கைகளும், சர்வதேச ரீதியாக பலத்த பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ள சூழலில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலிருந்தும், அமெரிக்காவை விலகிக் கொள்ள உத்தரவிட்டிருக்கிறார் டொனால்ட் ட்ரம்ப்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவை, நியாயமற்ற வகையில் தீர்மானங்களை நிறைவேற்றுகிறது என்றும், அது இஸ்ரேலுக்கு எதிராக செயற்படுகிறது என்றும், தனது முதலாவது ஆட்சிக் காலத்தில் ட்ரம்ப் கூறியிருந்தார்.

அந்தக் குற்றச்சாட்டை முன் வைத்து ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இருந்து, 2018ஆம் ஆண்டு, அமெரிக்காவை விலக்குவதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தார். ஜோ பைடன் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், 2021ஆம் ஆண்டு மீளவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், அமெரிக்கா இணைந்து கொண்டிருந்தது.

இப்பொழுது அமெரிக்காவை மீண்டும் விலகிக் கொள்வதற்கு, டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டிருக்கிறார்.

ட்ரம்ப்பின் இந்த தீர்மானம், இலங்கையில் இடம் பெற்ற மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கான செயல் முறைகள் மீண்டும் சிக்கலான கட்டத்துக்குள் செல்லக் கூடிய சூழலை ஏற்படுத்தியிருக்கிறது. 2011ஆம் ஆண்டு தொடக்கம் ஜெனிவாவில், இலங்கையில் நீதி, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் போன்றவற்றை உறுதி செய்வதற்கான தீர்மானங்களை கொண்டு வந்து நிறைவேற்றியது அமெரிக்கா தான். அமெரிக்காவின் தலைமையிலான அனுசரணை நாடுகளே, இதற்கான முனைப்புகளில் ஈடுபட்டிருந்தன.

2018இல்அமெரிக்கா விலகிக் கொண்ட பின்னரே, பிரித்தானியாவின் தலைமையில் அந்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அமெரிக்கா மீளவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இணைந்து கொண்ட போதும், பிரித்தானியாவின் தலைமையிலேயே பொறுப்புக்கூறல் தொடர்பான தீர்மானங்களை நிறைவேற்றும் காரியங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், பிரித்தானியாவுக்கு, அமெரிக்கா அளவுக்கு சர்வதேச அளவில் செல்வாக்கு இல்லை. பிற நாடுகளின் மீது அழுத்தங்களை கொடுக்கக் கூடிய சூழல் இல்லை.

இது இலங்கை தொடர்பான தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு, சில வேளைகளில் சமரசம் செய்து கொள்ள வேண்டிய நிலையும், நீர்த்துப்போகச் செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

குறிப்பாக இந்தியாவின் அழுத்தங்களின் பேரில், பலமுறை தீர்மான வரைவுகள், இறுதிக் கட்டத்தில் மாற்றியமைக்கப்பட்டன. அல்லது திருத்தங்கள் செய்யப்பட்டு வலுவற்றதாக சமர்ப்பிக்கப்பட்டன.

இப்பொழுது மீண்டும், அமெரிக்கா, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலகியிருப்பது, போர்க்கால மீறல்களுக்கு நீதியையும் நியாயத்தையும் பொறுப்புக் கூறலையும் எதிர்பார்த்திருக்கும் தமிழ்மக்களுக்குப் நெருக்கடியை ஏற்படுத்தக் கூடும்.

ஏனென்றால், ஜெனிவாவில் பொறுப்புக் கூறல் சார்ந்து இப்போது முன்னெடுக்கப்படுகின்ற, சாட்சியங்களை சேகரிக்கின்ற பொறிமுறை வலுவானதாக இல்லாவிட்டாலும் அது சேகரிக்கின்ற ஆதாரங்களின் அடிப்படையில், அடுத்த கட்டமாக ஒரு வலுவான செயல் முறையை முன்னெடுப்பதற்கான வாய்ப்பைக் கொண்டிருக்கிறது.

சாட்சியங்கள் சேகரிக்கப்பட்ட பின்னர், அதன் அடிப்படையில், புலன் விசாரணைகள், சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

குற்றவாளிகளைத் தண்டனைக்கு உட்படுத்துவதற்கான செயல்முறைகளை நிறைவேற்ற வேண்டும் .ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஊடாக அதனை செய்வதற்கு வாய்ப்புகள் மிக அரிது. ஆனாலும், இப்போதுள்ள சூழலில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையை தாண்டி, இந்த விவகாரத்தை கொண்டு செல்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாக தென்படவில்லை இத்தகைய கட்டத்தில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வலுவான ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்றால், பொறுப்புக்கூறல் சார்ந்த நெருக்கடியை அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டும் என்றால், அதற்கு அமெரிக்கா போன்ற நாடுகளின் ஆதரவு முக்கியம்.

இவ்வாறான நிலையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகிக் கொள்வது, இத்தகைய முயற்சிகளை பலவீனப்படுத்தும்.

அதேவேளை, தற்போது இலங்கை தொடர்பான தீர்மானங்களுக்கு பிரதான அனுசரணை நாடாக விளங்கும் பிரித்தானியா, இப்பொழுது சற்று கடினமான போக்கை கையாளுவதற்கான வாய்ப்புகள் தென்படுகின்றன.

பிரித்தானியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது, பொறுப்புக்கூறல் விவகாரத்தில் முக்கியமான திருப்பங்கள் ஏற்படும், அதிரடியான தீர்மானங்கள் எடுக்கப்படும் என எதிர்பார்ப்புகள் பரவலாக காணப்பட்டன.

குறிப்பாக கடந்த டிசம்பர் மாதம் சர்வதேச மனித உரிமைகள் தினம் கொண்டாடப்பட்ட போது, போர்க் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய சிலருக்கு எதிராக பிரித்தானியா பயணத் தடைகளை அறிவிக்க வாய்ப்பு இருப்பதாக கருதப்பட்டது. ஆனால், அவ்வாறான எந்த அறிவிப்பும் கெய்ர் ஸ்டாமர் அரசாங்கத்தினால் வெளியிடப்படவில்லை.

பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டாமர் இம்முறை தனது இல்லத்தில் தைப் பொங்கலை. கொண்டாடி இருக்கிறார் . இந்த கொண்டாட்டங்களுக்கு பிறகு பிரித்தானியாவின் இந்தோ– பசுபிக் பிராந்திய விவகாரங்களுக்கான அமைச்சர் கத்தரின் வெஸ்ட் இரண்டு நாள் பயணமாக கடந்த மாத இறுதியில் இலங்கைக்கு வந்து சென்றிருக்கிறார்.

இந்தப் பயணத்தின் போது அவர் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்த கலந்துரையாடல்கள் அனைத்தும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பிரித்தானியாவின் அடுத்த கட்ட நகர்வை தீர்மானிப்பதற்கானவையாக இருந்தன எனத் தெரிகிறது.

ஆட்சி மாற்றத்திற்குப் பின்னரான சூழலில் தமிழர்களின் நிலை மற்றும் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்கு அவர் கவனம் செலுத்தியிருந்தார். அவர், கொழும்பில் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் இடம் பெற்ற ஒரு கலந்துரையாடலில், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மனித உரிமைகள் மற்றும் நிலைமாறுகால நீதி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் பிரித்தானியா தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குமென உறுதியளித்திருக்கிறார்.

அதேபோல யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடிய போது, கத்தரின் வெஸ்ட் குறிப்பிட்டுள்ள ஒரு விடயம், மிகமுக்கியமானதாக தென்படுகிறது.

பொறுப்புக்கூறல் விவகாரத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் பிரித்தானிய முன்நின்று செயற்பட்டு வருகின்ற நிலையில் இது பற்றி அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் தாம் கலந்துரையாடிய போதிலும், அவர்கள் ஓரிரு வார்த்தைகளிலேயே பதிலளித்தனர் என்றும், கத்தரின் வெஸ்ட் கூறியிருக்கிறார்.


பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அப்பால் இலங்கை அரசாங்கத் தரப்பில், இருந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் எட்டப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



இந்த நிலையில் இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கத்துடன் பேணப்பட்டு வரும் அணுகுமுறையை, தமது அரசாங்கம் மீளாய்வுக்கு உட்படுத்த விருப்பதாகவும், இதுகுறித்து வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் கத்தரின் வெஸ்ட் கூறியிருக்கிறார்.

இது, பிரித்தானியாவின் இதுவரை கால அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான அறிகுறியாகத் தெரிகிறது. இதுவரை பிரித்தானியா இலங்கையைப் பகைத்துக் கொள்ளாத வகையிலேயே, தீர்மானங்களை முன்வைத்து நிறைவேற்றியது.



அத்துடன் இலங்கைக்கு வலிக்காத வகையில் செயற்பட்டு வந்திருக்கிறது. இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏமாற்றத்தையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியது. ஆனால் தமது அணுகுமுறை எந்தப் பலனையும் கொடுக்கவில்லை என்பதை பிரித்தானியா இப்போது உணரத் தொடங்கி இருக்கிறது என்பதையே, கத்தரின் வெஸ்டின் கருத்து வெளிப்படுத்துகிறது.

சிங்கள தலைவர்கள் எப்போதுமே சர்வதேச சமூகத்தை இப்படித் தான் ஏமாற்றி வந்திருக்கிறார்கள். காலம் கடத்துவதும், பதில் கூறாமல் நகர்த்துவதும் அவர்களுக்கு கைவந்த கலை. அதனை அவர்கள் பிரித்தானிய தரப்பிடமும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என தெரிகிறது

இப்படிப்பட்ட நிலையில், பிரித்தானியா தமது அணுகுமுறையை மாற்றிக் கொள்வது குறித்து, ஆலோசித்து வருவதாக கத்தரின் வெஸ்ட் கூறியிருப்பது ஒரு முக்கியமான திருப்பமாக அமையலாம். அதுவும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், இலங்கை விவகாரம் முன்னெடுக்கப்பட போகின்ற சூழலில், பிரித்தானியா இந்த முடிவை எடுக்க முனைந்திருக்கிறது.

இது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய சாத்தியங்கள் உள்ளதையும் நிராகரிக்க முடியாது. ஆனால், அது அமெரிக்கா வின் வெளியேற்றத்தினால் உள்ள இடைவெளியை நிரப்புவதற்குப் போதுமானதாக இருக்குமா என்பதே முக்கியமான கேள்வி.

# பாடசாலை மாணவர்களின் விவாத மேடையும் தமிழ் அரசியலும்

பாடசாலை மாணவர்கள் அரசியல்வாதிகளை கிழித்துத் தொங்க விட்டார்கள் என்று கூறிச் செய்திகளும் காணொளிகளும் நேற்றிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன. யுடியுப்பர்களுக்கு சூடான, உணர்ச்சிகரமான விடயங்கள் கிடைத்திருக்கின்றன. அவர்கள் வழமை போல தலைப்புக்கும் உள்ளடக்கத்துக்கும் தொடர்பு இல்லாத காணொளித் துண்டுகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த சில ஆண்டுகளாக மேலெழுந்து வருகின்ற ஒரு போக்கு இது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான விவாதப் போட்டிக் களத்தில் எடுக்கப்பட்ட காணொளிகளே அவை. அந்த விவாதப் போட்டிகளின் தலைப்புகள் பெரும்பாலும் அரசியல் பரிமாணத்தைக் கொண்டவை. அதனால் மாணவர்கள் அரசியல்வாதிகளை விளாசித் தள்ளுவார்கள். அவ்வாறு பாடசாலை மாணவர்கள் அரசியல்வாதிகளை விளாசித் தள்ளுவதை தமிழ்ச் சமூகம் ரசிக்கின்றதா?

இம்முறை விவாதப் போட்டிக்கான தலைப்பு ஈழமணித் திருநாட்டிலே தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அன்றாட இடர்களுக்கு பெரிதும் காரணமாக இருப்பவர்கள் அரச ஊழியர்களா அல்லது அரசியல்வாதிகளா? என்பதாகும்.

இதில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் அரச அலுவலர்களே காரணம் என்று வாதிட்டார்கள். கொழும்பு இந்துக் கல்லூரி மாணவர்கள் அரசியல்வாதிகளே காரணம் என்று வாதிட்டார்கள். இந்த வாதப்பிரதி வாதங்களின் போது இரு தரப்பும் அரசியல்வாதிகளையும் அரச அலுவலர்களையும் விளாசித் தள்ளினார்கள்.

அரச அலுவலகங்களின் மீது குறிப்பாக மருத்துவ சுகாதாரத் துறையின் மீது விமர்சனங்களை முன் வைத்து அதன் மூலமே பிரபல்யமாகி, அந்த பிரபல்யத்தை முதலீடாக்கி, ஒரு மருத்துவர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் ஓர் அரசியல் சூழலில், அந்த மருத்துவர் தொடர்ந்தும் ஒரு சர்ச்சைப் பொருளாக, விவாத பொருளாகக் காணப்படும் ஓர் அரசியல் சூழலில், அரச அலுவலர்களையும் அரச அலுவலகங்களையும் தாக்குவது என்பது அதிகம் ஆர்வத்தோடு கவனிக்கப்படும். இம்முறை விவாதப் பொருளாக அது எடுக்கப்பட்டதன் பின்னணியில் அந்த சமகால முக்கியத்துவமும் உண்டு.

இதற்கு முந்திய ஆண்டுகளில் இவ்வாறான விவாதக் களங்களில் பெரும்பாலும் அரசியல்வாதிகள்தான் விமர்சிக்கப்படுவதுண்டு. ஆனால் இம்முறை அரசு அலுவலர்கள் மீதும் விமர்சனங்கள் பாய்ந்திருக்கின்றன. கடந்த ஆண்டிலிருந்து தமிழ் அரசியலில் எழுச்சி பெற்று வருகின்ற ஒரு புதிய தோற்றப்பாடு இது.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், பள்ளிக்கூட பிள்ளைகள் அரசியல்வாதிகளையும் அரச அலுவலர்களையும் விமர்சிக்கின்றார்கள் என்பதல்ல. அந்த விமர்சனங்களை ரசிக்கும் ஒரு மனோநிலை சமூகத்தில் காணப்படுகிறது என்பது தான். அது தான் அர்ஜுனா என்ற நாடாளுமன்ற உறுப்பினரை வெற்றி பெற வைத்தது. இன்று வரை அவரை ஒரு பேசு பொருளாக வைத்திருக்கின்றது.

இந்த விமர்சனத்தை முன் வைக்கும் மாணவர்களில் எத்தனை பேர் புதிய வாக்காளர்கள் என்பது தெரியவில்லை. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அப்புதிய வாக்காளர்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்பதும் தெரியவில்லை. ஆனால் நிச்சயமாக அவர்களுடைய பெற்றோர், உறவினர்கள், குறிப்பாக ஆசிரியர்கள் யாரோ ஒரு அரசியல்வாதிக்குத்த ான் வாக்களித்திருப்பார்கள்.

இந்த எல்லா அரசியல்வாதிகளையும்த ான் அந்த மாணவர்கள் விமர்சிக்கின்றார்கள். அப்படியென்றால் அந்த அரசியல்வாதிகளை தெரிந்தெடுத்த




தமது பெற்றோரையும் ஆசிரியர்களையும் தாம் வாழும் சமூகத்தையும் அவர்கள் விமர்சிக்கிறார்கள் என்று பொருள்.

அவ்வாறு அவர்கள் தமது பெற்றோரால் ஆசிரியரால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை விவாதப் பொருள் ஆக்குவதை இந்த சமூகம் ரசிக்கிறது என்பது அரசியல்வாதிகள் மீதும் அரசு அலுவலர்கள் மீதும் இந்த சமூகம் எந்தளவுக்கு வெறுப்பாக இருக்கிறது என்பதைக் காட்டுகின்றதா?

ஆனால் இது உலகின் பெரும்பாலான ஜனநாயகப் பரப்புக்களில் காணப்படும் ஒரு பொதுவான அம்சம். மாணவர்கள் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் அரசியல்வாதிகளுக்கு அதிலும் குறிப்பாக ஆளுங்கட்சிக்கு எதிராக இருப்பார்கள். அதிகாரத்துக்கு எதிரான எதிர்ப்புணர்ச்சி என்பது எப்பொழுதும் மாணவ சமூகத்தின் மத்தியில் இருக்கும். ஆனால் அதே அதிகாரத்துக்கு அவர்களுடைய பெற்றோர்களோ அல்லது ஆசிரியர்களோ வாக்களித்தும் இருப்பார்கள். இந்த முரண்பாடும் எல்லா ஜனநாயகப் பரப்புகளிலும் இருக்கும்.

இள இரத்தம் எப்பொழுதும் அப்படித் தான் கொதிக்கும். அதுதான் கடந்த சில ஆண்டுகளாக இந்துக் கல்லூரிகளுக்கு இடையிலான விவாத மேடைகளில் காணப்படும் பொதுப் பண்பாகும். இது போன்ற விவாத மேடைகளில் வெளிப்படையாக அரசியல் விவாதிக்கப்படுவது ஆரோக்கியமானது. பாடசாலை மாணவர் இது போன்ற விவாதப் போட்டிகளுக்காக அரசியலை ஆழமாகக் கற்பது வரவேற்கத் தக்கது. விவாதக் களங்களில் உணர்ச்சி பொங்கப் பேசுபவர்களுக்கே கை தட்டல்கள் அதிகம் கிடைக்கும். எனினும் அங்கு அரசியல் அறிவுபூர்வமாக, தர்கபூர்வமாக ,கணிதமாகப் பயிலப்படுகின்றது. இது தமிழ்த் தேசிய அரசியலை அறிவியல் மயப்படுத்த உதவும்

மேலும் இந்த விமர்சனங்களை சமூகம் ஏன் அத்துணை ஆர்வமாக ரசிக்கிறது என்பதற்கு பின்னால் உள்ள கூட்டு உளவியலை அரசியல்வாதிகள் விளங்கிக் கொள்ள வேண்டும். இது மாணவர்கள் விவாதத்துக்காக ஒரு சுவாரசியத்துக்காக ஹஎன்டெர்டெயின் மென்றுக்காகச்ஹ செய்யும் விளையாட்டு இதை சீரியஸாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்று பெரும்பாலான அரசியல்வாதிகள் நம்புவது தெரிகிறது. ஏனென்றால் இந்த விவாத மேடைகளில் கூறப்பட்ட கருத்துக்களை செவிமடுத்து அரசியல்வாதிகள் தங்களைத் திருத்திக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக இது போன்ற விவாத மேடைகளில் கூறப்படும் விமர்சனங்களைத் தமிழ்ப் பொதுப் புத்தியானது ரசிக்கிறது என்ற ஒரு அடிப்படை உண்மை இங்கு உண்டு.

தமது அரசியல்வாதிகளை குறிப்பாக தாங்கள் தெரிந்தெடுத்த தங்களுடைய பிரதிநிதிகளையே அவ்வாறு விமர்சிக்கும் ஒரு போக்கு ஏன்? எங்கிருந்து வருகிறது? ஆழமான வெறுப்பும் அவநம்பிக்கையும் அதிருப்தியும் தமிழ் வாக்காளர்கள் மத்தியில் உண்டு என்பதைத்தான் அது காட்டுகின்றதா? கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த தீர்ப்புகள் அதன் பிரதிபலிப்பா?

இந்த இடத்தில் இது ஒரு சம்பந்தப்பட்ட மற்றொரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ்ப் பொது வேட்பாளரை நியமிப்பதற்காக உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பொதுச்சபையின் உறுப்பினர்கள், மக்கள் மத்தியில் உள்ள தொழிற் சங்கங்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவ அமைப்புக்கள், கமக்கார அமைப்புகள் போன்ற மக்கள் அமைப்புகளை தொடர்ச்சியாகச் சந்தித்த பெரும்பாலான சந்திப்புகளின் போது ஒரு விடயம் திரும்பத் திரும்ப மக்களால் வலியுறுத்திக் கூறப்பட்டது.

அது என்னவென்றால், நீங்கள் தனியே வாருங்கள். கட்சிகளோடு வராதீர்கள். கட்சிகள் வேண்டாம். என்பது தான். தென்மராட்சியும் உட்பட சில இடங்களில் நீங்கள் சுயேட்ச்சையாக நில்லுங்கள் என்றும் கேட்கப்பட்டது.

எனவே மாணவர்கள் அரசியல்வாதிகள் மீதும் கட்சிகள் மீதும் வைக்கும் விமர்சனங்களை இளவயதினர் அதிகாரத்தில் இருப்பவர்களின் மீது முன் வைக்கும் வழமையான விமர்சனங்கள் என்று கூறித் தட்டிக் கழித்து விட்டுப் போக முடியாது. தமிழ்க் கட்சிகள், தமிழ் அரசியல்வாதிகளின் மீதான நம்பிக்கை இழப்பு அதிகரித்து வருகிறது. தாங்கள் வாக்களித்த அரசியல்வாதி மீதே தமிழ் மக்களுக்கு முழு நம்பிக்கை இல்லை. ஁என்ன செய்வது? வேறு தெரிவு இல்லை. அதனால் அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்பதைத் தான் அது காட்டுகின்றதா?

எனவே மாணவர்களின் விவாத மேடைகளில் வெளிப்படும் கருத்துக்களில் இருந்து தமிழ்க் கட்சிகளும் அரசியல்வாதிகளும் குறிப்பாகத் தமிழ்த் தேசியவாத அரசியலை முன்னெடுக்கும் தரப்புக்கள் தொகுத்துக் கற்க வேண்டிய ஒரு விடயம் உண்டு.

அது இள இரத்தம் ,வழமை போல கண்ணை மூடிக் கொண்டு எதிர்க்கிறது என்று கூறிக் கடந்து போய் விட முடியாது. அது முழுச் சமூகத்துக்குள்ளும் பரவியிருக்கும் ஓர் அதிருப்தி. அல்லது சலிப்பு. அல்லது வெறுப்பு என்று கூடச் சொல்லலாம். எனவே இந்த விமர்சனங்களை நிதானமாக அணுக வேண்டும். இது போன்ற விமர்சனங்கள் சமூகத்தின் ஏனைய தரப்புகள் மத்தியிலும் உண்டா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதிலிருந்து கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்கள் தமிழ் தேசிய அரசியலை மேலும் செழிப்பாக்க உதவும். அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் இந்துக்களின் விவாதச் சமருக்கு பின்னரும் இப்படி ஒரு கட்டுரை எழுதும் ஒரு நிலைமை வரக்கூடாது. ஏனென்றால் ஏற்கனவே தேசிய மக்கள் சக்திக்கு தமிழர் தாயகத்தில் ஏழு ஆசனங்கள் கிடைத்து விட்டன.




# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2




## மணமகள்

**ID08121149 F**
28yrs, 5'4" , Single , Chithirai , 3 Sevai , Bachelors.. , Senior Finance.. , Canada

**ID08121145 F**
33yrs, 5'6" , Divorced , , Sevai , Bachelors.. , Businesswoman , Netherlands

**ID08121131 F**
35yrs, 5'4" , Single , Chithirai , N/A Sevai , Bachelors.. , Project Coordinator , Canada

**ID08121130 F**
33yrs, 5'7" , Single , Punarpoosam , 5 Sevai , Bachelors.. , Data , Canada

**ID08121125 F**
26yrs, 5'3" , Single , Punarpoosam , 1 Sevai , High School , Admin Clerk.. , Canada

**ID08121122 F**
33yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Researcher , Canada

**ID08120754 F**
24yrs, 5'1" , Single , Bharani , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08121119 F**
46yrs, 5'5" , Single , Uthiraadam , 10 Sevai Bachelors.. , Law Clerk , Canada

**ID08121122 F**
33yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Researcher , Canada

**ID08120752 F**
38yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Senior finance.. , Sri Lanka

**ID08121116 F**
30yrs, 5'4" , Divorced , , Sevai , Masters Degree , , India

**ID08121115 F**
24yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , High School , Accounting , Canada

**ID08120744 F**
39yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Own Business.. , Sri Lanka

**ID08121111 F**
37yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Teacher , Sri Lanka

**ID08121110 F**
33yrs, 5'3" , Single , Moolam , 12 Sevai , Masters Degree , Doctor , Canada

**ID08121107 F**
28yrs, 5'4" , Single , , Sevai , Bachelors.. , IT , Switzerland

**ID08120728 F**
40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727 F**
24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08121109 F**
33yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Counselor , Canada

**ID08120722 F**
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka

**ID08121106 F**
21yrs, 5'4" , Single , Mrigasheersham , 7 Sevai , Diploma , Beautify Parlour , Sri Lanka

**ID08121100 F**
26yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Account , Sri Lanka

**ID08120721 F**
23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka

**ID08120718 F**
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08121099 F**
21yrs, 5'4" , Single , Pooram , 4 Sevai , High School , Cashier , Canada

**ID08120695 F**
28yrs, 5'4" , Single , Swaathi , 5 Sevai , Bachelors.. , Financial.. , Canada

**ID08121095 F**
30yrs, 5'4" , Divorced , , Sevai , Bachelors.. , Business , India

**ID08121089 F**
24yrs, 5'2" , Single , Uthiraadam , 10 Sevai , Masters Degree , Admin , Canada

**ID08121083 F**
50yrs, 5'4" , Seperated , Pooram , N/A Sevai , Postgraduate.. , Sociial Worker , Canada

**ID08121072 F**
21yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , High School , Studying , Sri Lanka



## மணமகன்

**ID08121146 M**
41yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , High School , Employ , Canada

**ID08121144 M**
29yrs, 6' , Single , Poorattathi , Sevai , Ph.D , Researcher , United States

**ID08121143 M**
27yrs, 5'6" , Single , Poosam , N/A Sevai , Masters Degree , IT Specialist , Canada

**ID08121142 M**
32yrs, 5'4" , Single , Kettai , 3 Sevai , High School , Printers , Sri Lanka

**ID08121140 M**
38yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Electrical.. , Canada

**ID08121136 M**
41yrs, 5'7" , Single , Rohini , N/A Sevai , Diploma , Accountant , Sri Lanka

**ID08121134 M**
29yrs, 5'5" , Single , Aayilyam , N/A Sevai , Bachelors.. , Marketing , Canada

**ID08121127 M**
28yrs, 5'5" , Single , Thiruvaathirai , N/A Sevai , Bachelors.. , Tims , Canada

**ID08121124 M**
29yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Management.. , Sri Lanka

**ID08121120 M**
32yrs, 5'7" , Single , Aswini , N/A Sevai , Diploma , Tourisum , Sri Lanka

**ID08121118 M**
35yrs, 5'8" , Single , Thiruvonam , 10 Sevai , Masters Degree , Manager Reporting.. , Sri Lanka

**ID08121105 M**
34yrs, 5'6" , Single , Uthiraadam , N/A Sevai , Masters Degree , Engineer , Canada

**ID08121104 M**
35yrs, 6'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Lawyer , Canada

**ID08121102 M**
22yrs, 5'5" , Single , Aswini , Sevai , Bachelors.. , Customer Service.. , Sri Lanka

**ID08121101 M**
36yrs, 5'7" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Driver , Canada

**ID08121098 M**
39yrs, 5'11" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High \School , Transportatio.. , Canada

**ID08120739 M**
30yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineer , Sri Lanka

**ID08121097 M**
33yrs, 5'6" , Single , Mrigasheersham , 6 Sevai , Bachelors.. , Technician , Canada

**ID08120737 M**
28yrs, 5'8" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Testing , Sri Lanka

**ID08121094 M**
27yrs, 5'7" , Single , Kettai , 11 Sevai , Ph.D , Scientist , Canada

**ID08121093 M**
34yrs, 5'7" , Single , Moolam , N/A Sevai , Bachelors.. , IT Specialist , Canada

**ID08121092 M**
31yrs, 5'4" , Single , Aayilyam , N/A Sevai , High School , Driver , Canada

**ID08120734 M**
36yrs, 5'7" , Annulled , Bharani , 5 Sevai , Masters Degree , Product manager , Sri Lanka

**ID08120733 M**
27yrs, 5'7" , Single , Anusham , N/A Sevai , Bachelors.. , Research Technician , United States

**ID08121090 M**
39yrs, 5'7" , Divorced , Poosam , N/A Sevai , High School , Ware house.. , Canada

**ID08120730 M**
29yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineering , Sri Lanka

**ID08121088 M**
35yrs, 5'9" , Single , Pooram , 1 Sevai , Postgraduate.. , Marketing.. , Sri Lanka

**ID08121086 M**
28yrs, 5'7" , Single , Uthirattathi , 2 Sevai , High School , Chef , Canada

**ID08120716 M**
18yrs, 4' , Divorced Not Specified , N/A Sevai , None , Hrhsehsh , Canada

**ID08121077 M**
32yrs, 5'9" , Single , Thiruvonam , 3 Sevai , Bachelors.. , Business Owner , Canada

# தலைவர்களை இழந்த தமிழ்த்தேசிய அரசியல்!

தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுப்பதாகக் கூறும் கட்சிகள் பதினைந்துக்கு மேல் உண்டு. ஆனாலும் தமிழ்த்தேசிய அரசியல் அரங்கிலே ஒரு வலிமையான அடையாளம் காட்டக் கூடிய தலைவர் என எவருமே இல்லை. என்பதால் தான் தமிழ்த்தேசிய அரசியற் சக்திகளை ஒருங்கிணைக்கவும் முடியவில்லை. அதனைக் கோட்பாட்டு ரீதியாக வளர்த்தெடுக்கவும் முடியவில்லை. நடைமுறை ரீதியான பிரச்சினைகளுக்கு அதனால் முகம் கொடுக்கவும் முடியவில்லை. அதைப் பலமடையச் செய்யவும் முடியவில்லை. உள்நாட்டில் தமிழ்ச் சூழலிலும் சரி, இலங்கைக்குள்ளும் சரி, இலங்கைக்கு வெளியே சர்வதேச சமூகத்தோடும் சரி, புலம்பெயர்ந்த தமிழர்களிடத்திலேயும் சரி அதனால் சரியான முறையில் உரையாடலும் தொடர்பாடலைப் பேணவும் முடியவில்லை.

தொகுத்துச் சொன்னால், 2009க்குப் பிறகு தமிழ்த்தேசிய அரசியல் பலவீனப்பட்டே வந்துள்ளது. சரி பிழைகளுக்கு அப்பால் சம்பந்தன் இருக்கும் வரையில் தமிழ்த்தேசிய அரசியலுக்கு ஒரு தலைமை இருப்பதான தோற்றமாவது இருந்தது. ஆயிரம் விமர்சனங்களுக்கு மத்தியிலும் வெளி அரசியற் தரப்புகளோடு உரையாடக் கூடிய தொடர்பாடலைச் செய்யக் கூடிய நிலையில் சம்பந்தன் இருந்தார். சம்பந்தனையே அவர்கள் தமிழர்களின் பிரதிநிதியாகவும் தலைவராகவும் அடையாளம் கண்டனர்.

சம்பந்தனின் மறைவுக்குப் பிறகு அதுவும் இல்லையென்றாகி விட்டது.

இப்பொழுது தெரு முக்குகளில் பெட்டிக்கடைகள் இருப்பதைப் போல, அங்கங்கே பெயர்ப்பலகைகளோடு ஒவ்வொரு கட்சிகளும் உள்ளன. சில கட்சிகளில் ஐந்தாறு பேருக்கு மேல் உறுப்பினர்களே இல்லை. சிலவற்றில் அவர்களே மாறாத தலைவர்களாக இருக்கிறார்கள். அதனால் மாற்றமடைந்துள்ள சூழலுக்குப் பொருத்தமான முடிவுகளை எடுக்க முடியாமலும் புதிய சவால்களை எதிர்கொள்ள முடியாமலும் உள்ளனர். இதனால் தான் கடந்த தேர்தலில் இந்தக் கட்சிகளும் அணிகளும் படு தோல்வியடைந்தன. இதற்குப் பிறகு கூட இவை எந்தப் படிப்பினைகளையும் கொள்ளவில்லை. இன்னும் அதே பழைய பாணியிலேயே தமது அரசியலை முன்னெடுக்க முயற்சிக்கின்றன.

இதனால் அடுத்த சில மாதங்களில் வரவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் இவை தோல்விடையும் நிலையே பெரும்பாலும் உண்டு.

இவ்வளவுக்கும் இவை விடுதலை அரசியலையோ ஒடுக்குமுறைக்கு எதிரான அரசியலையோ மக்கள் அரசியலையே முன்னெடுப்பவையும் அல்ல. கடந்த முப்பது ஆண்டுகளாக இவை தேர்தல் அரசியலை மட்டுமே செய்து வருகின்றன. அதிலும் தோற்று விட்டன.

இவற்றில் மூன்று விதமான குழுக்கள் உண்டு. இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவை முற்று முழுதாகவே தேர்தல் அரசியலையே தமது வரலாறாகவும் வாழ்வாகவும் கொண்டவை. அதற்குத் தோதான வார்த்தைகளை சுலோகங்களை பிரகடனங்களை அவ்வப்போது தேர்வு செய்து பயன்படுத்திக் கொள்வதே இவற்றின் அரசியலும் உபாயமுமாகும்.

அடுத்த குழு, EPRLF TELO PLOT உள்ளிட்டவை. இவை முன்பாதி ஆயுதப் போராட்ட அரசியலையும் பின்பாதி தேர்தல் அரசியலையும் கொண்டவை. ஆயுதப் போராட்டத்திலிருந்து வந்தவை என்ற வகையில் இவை வேறு விதமான அரசியற் பண்பிற்குரியவையாக வளர்ச்சியடைந்திருக்க



வேண்டும். குறைந்த பட்சம் 2009 இல் ஏற்பட்ட விடுதலைப் புலிகள் வீழ்ச்சிக்குப் பிறகாவது தமிழ் அரசியல் பரப்பிலும் இலங்கை அரசியற் பரப்பிலும் உருவாகிய சூழலைக் கையாளக் கூடிய விதமாகத் தம்மை உருவாக்கியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் தேர்தல் அரசியலைக் கூடச் சற்று வேறுவிதமாகக் கைக்கொண்டிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் கூடிய விடுதலை அரசியலாகவும் மக்கள் அரசியலாகவும் அதைக்கையாண்டிருக்க முடியும்.

ஆனால் அப்படிச் செய்யவில்லை. பதிலாக தங்களுடைய இயல்பையும் அடையாளத்தையும் இழந்து, ஏற்கனவே இருந்த மிதவாத அரசியற் சக்திகளான இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி போன்றவற்றைப்போலவே இவையும் சுருங்கின.

இன்னொரு வகையில் இதைச் சொன்னால், இவற்றின் தலைவர்களான பத்மநாபா, சிறிசபாரத்தினம், உமா மகேஸ்வரன் போன்றோர் உருவாக்கியிருந்த அடையாளத்தையும் அரசியல் பாதையையும் கைவிட்டு, சம்பந்தன், கஜேந்திரகுமார் வழியிற் செல்ல முற்பட்டன. என்பதால் தான் ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட் மற்றும் ஜனநாயகப் போராளிகள், சிறிகாந்தா — சிவாஜிலிங்கத்தின் தமிழ்த்தேசியக் கட்சி, விக்னேஸ்வரனின் தமிழ்த் தேசியக் கூட்டணி எல்லாம் இணைந்து உருவாக்கிய, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனி அடையாளத்தைப் பெற முடியாமல் போனது. மக்களாலும் நிராகரிக்கப்பட்டது.

மூன்றாவது குழு 2009க்குப் பிறகு ஏற்கனவே இருந்த கட்சிகள், குழுக்கள், அணிகளிலிருந்து பிரிந்து புதிதாக உருவாகியவை. இவை முற்று முழுதாகவே தேர்தல் அரசியலை மட்டுமே குறியாகக் கொண்டவை. சற்று விலக்கானது என்றால் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மட்டும்தான். அதை அரசியற் கட்சியாக நோக்குவதையும் விட, ஒரு செயற்பாட்டு இயக்கமாக பசுமை சார்ந்த மக்கள் அமைப்பாகப் பார்ப்பதே சரியானதாகும்.

இந்தச் சூழலில் தான் தமிழ்த்தேசிய அரசியற் பரப்புள்ளது. இதிலும் தமிழரசுக் கட்சி, உள் முரண்பாடுகள் வலுத்து நீதிமன்றம் தொடக்கம் மயானம் வரையில் அணி மோதல்களில் சிக்குண்டுள்ளது. அதைக் கட்டுப்படுத்தி, ஒழுங்காக்கி வழிப்படுத்தக் கூடிய தலைமைத்துவம் அதற்கில்லை. தற்போது பொறுப்பேற்றுள்ள பதில் தலைவர் சீ.வி.கே சிவஞானத்தை எவரும் தலைவராக ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

சித்தார்த்தனுக்குப் புளொட்டுக்குள்ளேயே நெருக்கடிகள். ரெலோவுக்குள்ளும் உள் மோதல்கள் பலமடையத் தொடங்கி விட்டன. ஈ.பி.ஆர்.எல். எவ் சத்தமின்றி ஓய்வுக்குப் போகும் நிலைக்கு உள்ளாகியுள்ளது. ஏற்கனவே ஈரோஸ் இவ்வாறான ஒரு நிலைக்குள்ளாகியதை இங்கே நினைவிற் கொள்ள வேண்டும்.

1989இல் 14 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த (ஆயுதப் போராட்ட இயக்கங்களில் அதிகூடிய ஆசனங்களைக் கைப்பற்றிய முதலும் கடைசியுமான அமைப்பு ஈரோஸ்தான்) ஈரோஸ், பின்னர் ஒரு உறுப்பினரைக் கூடப் பெற முடியாத நிலையில் அரசியற் பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. ஏறக்குறைய அதையொத்த நிலைக்கே இன்றைய ஈ.பி.ஆர்.எல்.எவ் வந்துள்ளது. ஆனால், தம்மைச் சரியாக ஒழுங்கமைத்தால் மீள எழுச்சியடைய முடியும். அதற்கு அமைப்புகளில் இருப்போர் விஞ்ஞான பூர்வமான ஆய்வுக்கும் மனந்திறந்த உரையாடல்களுக்கும் விட்டுக் கொடுப்புகளுக்கும் தம்மை தயார்ப்படுத்த வேண்டும்.

இப்போதுள்ள தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி இரண்டும் தான் பாராளுமன்ற அங்கத்துவத்தைக் கொண்டுள்ளன. இவற்றின் தலைவர்களாக கஜேந்திரகுமாரும் சிறிதரனுமே உள்ளனர். இருவரும் தீவிரப் போக்குடையவர்கள். அதனால், பிறரை, பிற சக்திகளை அரவணைத்துச் செல்ல முடியாதவர்கள். ஆகவே இவர்களால் எந்த அணிக்கும் தலைமை தாங்கவும் முடியாது. எவரோடும் இணைந்து வேலை செய்யவும் முடியாது. ஏனைய தரப்புகளையோ, குழுக்களையோ அணி சேர்க்கவும் முடியாது.

எனவே இவர்கள் இருவரும் மட்டுமே ஒரு மேலோட்டமான அரசியற் கூட்டையோ உறவையோ கொண்டிருக்க முடியும். அதிலும் தமிழரசுக் கட்சியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் சிறிதரனை விட வேறு தரப்பினரின் கைகளிலேயே சுமந்திரனின் கைகளிலேயே உள்ளது. என்பதால், தமிழரசுக் கட்சியின் முழுச் சம்மதத்துடன் எந்தக் கூட்டையும் சிறிதரன் மேற்கொள்ள முடியாது. எனவே சிறிதரனும் கஜேந்திரகுமாரும் இரண்டு தண்டவாளங்களைப் போலத் தான் இருக்க முடியும்.

இந்த நிலையில் மாற்றுத் தரப்புகள் தமக்கிடையில் ஒரு அணியை உருவாக்கி, தமிழ்த்தேசிய அரசியலுக்குத் தலைமை தாங்க முடியும். ஆனால் அதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டும். அதற்கு முதலாவதாக இதிலுள்ள கட்சிகளும் தலைவர்களும் தம்மைப் புதுப்பித்துக் கொள்வது மாற்றத்துக்குள்ளாவது அவசியமாகும். இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி


கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –




யைப் போலன்றி, விடுதலை இயக்கப் பாரம்பரியத்திலிருந்து வந்தவர்கள் என்ற வகையில் செயற்பாட்டு அரசியலை நடைமுறைப்படுத்த வேண்டும். உதாரணமாக, ஜே.வி.பி எப்படி என்.பி.பி ஆக பரிமாணமடைந்ததோ அதைப் போலவேனும். இல்லையெனில் அவ்வப்போது அறிக்கை, ஊடகச் சந்திப்பு, கடிதம் எழுதுவது என தமிழர் விடுதலைக் கூட்டணியைப் போலவே இவையும் மாறும் அபாயமுண்டு.

இதற்காகத் தான் இவை ஒரு மாற்று உபாயமாக ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ்ப் பொதுவேட்பாளரை உருவாக்கி நிறுத்தின. அதைத் தொடர்ந்து தமது செல்வாக்கை உயர்த்திக் கொள்ளலாம் என்று கற்பனை செய்தன. ஆனால், அது எந்த வகையிலும் உதவப் போவதில்லை என்று இந்தக் கட்டுரையாளர், உட்படப் பலரும் வலியுறுத்தி வந்தனர். இறுதியில் தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற புயல் இருந்த செல்வாக்கையும் பலத்தையும் அடித்துச் சென்று விட்டது.

ஆகவே இப்போது தமிழ்த்தேசிய அரசியலில் உருவாகியுள்ள கோட்பாட்டுப் பலவீனம், தலைமைத்துவ வெற்றிடம், நடைமுறைப் பிரச்சினைகள், சமகால நிலவரத்தைக் கையாளும் ஆற்றல், எதிர்காலத்தைப் பற்றிய தீர்க்க தரிசனமான பார்வை, வெளியுறவுகள், பிற சக்திகளுடனான ஊடாட்டம் போன்றவற்றை நிரப்பி மேலெழக் கூடியவாறு எந்தச் சக்தியாவது மேலெழுந்தால் தான் தமிழ்த்தேசிய அரசியலின் எதிர்காலத்தை வடிவமைக்க முடியும். இல்லையெனில் காலத்தினால் கரைந்து போய் விடக் கூடிய சூழலே உண்டு.

தேர்தல் அரசியில் மட்டுமே மையங் கொண்டிருந்த காரணத்தினால், தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட கட்சிகளுக்கு அரசியல் அரங்கில் இடமில்லை என்ற நிலை உருவாகியுள்ளது. இதை ஒவ்வொரு அரசியற் தரப்பும் கவனத்திற் கொள்வது அவசியம். இது தமிழ்த் தேசியச் சக்திகளுக்கு மட்டுமல்ல, ஐ.தே.க, சிறிலங்கா சுதந்திரக் கட்சி போன்றவற்றுக்கும் பொருந்தும்.

எப்போதும் மக்கள் அரசியலில் செயற்பட்டால் வெற்றி தோல்விகளுக்கு அப்பால் இயங்கக் கூடிய ஒரு வெளியும் அரங்கும் அழியாது இருக்கும். அதுவே அரசியற் பலமாகும். தமிழ்த்தேசியத் தலைமையை உருவாக்க வேண்டுமெனில் இந்த உண்மையிலிருந்து படித்தால் நல்லது. அதாவது தேர்தலுக்கு அப்பாலும் அரசியல் உண்டு. அரசியற் பணிகள் உண்டு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

# மாவை சேனாதிராஜாவின் அரசியல் வாழ்வின் மூலமான படிப்பினைகள்!

கட்டுரையாளர்:-
மூத்த ஊடகவியலாளர்
- வீ.தனபாலசிங்கம் -



இலங்கை தமிழ் அரசியல் சமுதாயம் ஒரு குறுகிய கால இடைவெளியில் இரு மூத்த அரசியல் தலைவர்களை இழந்து விட்டது. இருவருக்கும் இடையில் சுமார் பத்து வயது வித்தியாசம் இருந்த போதிலும், அவர்கள் ஆறு தசாப்தங்களுக்கும் அதிகமான காலத்தை இலங்கை தமிழர்களின் ஜனநாயக ரீதியான அரசியல் உரிமைப் போராட்டத்துக்காக அர்ப்பணித்தவர்கள்.

இராஜவரோதயம் சம்பந்தன் மரணமடைந்து ஏழு மாதங்கள் நிறைவடைவதற்கு இரு நாட்கள் இருந்த நிலையில் மாவை சேனாதிராஜா 2025 ஜனவரி 29 ஆம் திகதி புதன்கிழமை காலமானர். அவரது இறுதிக் கிரியைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊரான மாவிட்டபுரத்தில் பெருமளவு மக்களின் பங்கேற்புடன் இடம் பெற்றன.

மாவை சேனாதிராஜாவையும் சம்பந்தனையும் பல்வேறு அம்சங்களில் ஒப்பீடு செய்யமுடியாது என்ற போதிலும், உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களுக்கும் அதிகமான காலப் பகுதியில் இலங்கை தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்த பிரதான அரசியல் இயக்கத்தின் தலைமைப் பொறுப்புக்களில் இருந்தவர்கள் என்ற வகையில் அவர்கள் இருவருக்கும் இடையில் ஒரு ஒற்றுமை இருந்தது.

தமிழ் அரசியல் சமுதாயம் முன்னெப்போதையும் விட படுமோசமான முறையில் சிதறுண்டு பொறுப்பு வாய்ந்த ஒரு தலைமைத்துவம் இல்லாமல் நெருக்கடியில் சிக்கியிருப்பதால் இருவரும் தங்களது இறுதி நாட்களை பெரும் வேதனையுடனேயே கழித்திருப்பார்கள் என்பதில் இன்னொரு ஒற்றுமையும் அவர்களுக்கு இடையில் இருக்கிறது. அத்தகைய ஒரு துரதிர்ஷ்டவசமான நிலைக்கு அவர்களே பெருமளவுக்கு பொறுப்பும் கூட.

இறந்தவர்களைப் பற்றி கெடுதியாகப் பேசுவதை தவிர்ப்பது ஒரு பாரம்பரியப் பண்பாக பொதுவில் கருதப்படுகிறது. மனிதர்களாகப் பிறந்த நாம் எல்லோரும் ஒரு நாள் இறக்கத் தான் போகிறோம். ஆனால், வாழும் காலத்தில் எமது வாழ்க்கை முறை மற்றும் செயற்பாடுகள் மூலமாக எத்தகைய மரபை நாம் விட்டுச் செல்லப் போகிறோம் என்பதே முக்கியமானதாகும். அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை, இது மேலும் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தங்களைப் பின்பற்றியவர்கள் தொடர்ந்து அரசியல் பயணத்தை முன்னெடுப்பதற்கு அரசியல் தலைவர்கள் விட்டுச் சென்றிருக்கக் கூடிய வழிகாட்டல்களையும் அவர்களின் அணுகுமுறைகள் மற்றும் செயற்பாடுகளில் இருந்து பெறக்கூடிய படிப்பினைகளையும் விமர்சன அடிப்படையில் ஆராய்வது எதிர்காலத்துக்கான சரியான பாதையை தீர்மானிக்க உதவும் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

மாணவப் பருவத்தில் இருந்தே இலங்கை தமிழரசு கட்சியின் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சேனாதிராஜா, தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தில் பல வருடங்கள் சிறைவாசத்தை அனுபவித்ததுடன் கணிசமான தியாகங்களைச் செய்த ஒரு அரசியல் தலைவர். எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அப்பாபிள்ளை அமிர்தலிங்கம், எம். சிவசிதம்பரம் போன்ற முன்னைய முதுபெரும் தலைவர்களுடன் நெருக்கமாகச் செயற்பட்ட அவர் பேரினவாத மேலாதிக்கத்துக்கு எதிரான தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தின் அடையாளமாக நீண்ட காலமாக விளங்கிய ஒருவர்.

சேனாதிராஜாவை அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக அறிந்தவரான மூத்த பத்திரிகையாளரும் முக்கியமான அரசியல் ஆய்வாளருமான நண்பர் டி.பி.எஸ். ஜெயராஜ் சேனாதிராஜாவின் மறைவையடுத்து கடந்த வாரம் எழுதிய கட்டுரை ஒன்றில் தியாகங்கள் நிறைந்த போராட்டங்களைச் செய்த இளம் சேனாதிராஜாவை நினைவில் வைத்திருப்பவர்கள் அவரை கண்டனம் செய்யவோ அல்லது விமர்சனம் செய்யவோ தயங்குவார்கள் என்றும் அவரிடம் பிற்காலத்தில் ஏற்பட்ட விரும்பத்தகாத மாற்றத்துக்கு மத்தியிலும் கடந்த காலத்தை நினைவில் வைத்து அவர் மீது அவர்கள் தொடர்ந்தும் அனுதாபம் காட்டினார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.



சேனாதிராஜா அவரது இறுதிக்கால அரசியல் வாழ்க்கைக்காக அல்ல, கடந்தகால தியாகங்களுக்காக மாத்திரமே நினைவு கூரப்பட வேண்டியவர் என்பதே பெரும்பாலானவர்களின் அபிப்பிராயமாக இருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது. அரசியல்வாதிகள் தங்களது அரசியல் வாழ்வின் தொடக்கத்தில் எத்தகைய தியாகத்தைச் செய்திருந்தாலும், தலைமைத்துவப் பொறுப்புக்கு வந்த பிறகு அவர்கள் தாங்கள் தலைமை தாங்கும் இயக்கத்துக்கும் மக்களுக்கு எவ்வாறு வழிகாட்டுகிறார்கள் என்பதும் வாழும் முறையால் எவ்வாறு முன்னுதாரணமானவர்களாக விளங்குகிறார்கள் என்பதுமே அவர்களின் மரபாக வரலாற்றில் நினைவுகூரப்படும்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு இலங்கை தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மடியில் தானாக வந்து வீழ்ந்தது. அதன் தலைவராக இருந்த சம்பந்தன் போருக்கு பின்னரான காலப் பகுதியில் தமிழ் மக்களின் வலுவான ஒரு ஜனநாயக அரசியல் இயக்கமாக கூட்டமைப்பை கட்டியெழுப்புவதற்கு தன்னை எந்தளவுக்கு அர்ப்பணித்தார் என்பதும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு இசைவாக எந்தளவுக்கு நடைமுறைச் சாத்தியமான முறையில் முன்னெடுப்பதற்கு தலைமைத்துவத்தை வழங்கினார் என்பதுமே அவரின் அரசியல் மரபாக நினைவு கூரப்படும் என்று கடந்த வருடம் நடுப்பகுதியில் அவரின் மறைவுக்கு பிறகு இந்த பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

2004 பாராளுமன்ற தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு வீடு சின்னத்தில் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட காரணத்தினால், நீண்டகால உறங்கு நிலையில் இருந்த தமிழரசு கட்சி புத்துயிர் பெற்றது. அதற்கு பின்னரே அந்த கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவ கட்சியாக தன்னை ஒப்பீட்டளவில் முனைப்புடன் மீண்டும் காட்டிக் கொள்ளக்கூடிய சூழ்நிலை தோன்றியது. கடந்த இருபது வருடங்களாக ஒருவருக்கு பின் ஒருவராக தமிழரசு கட்சிக்கு தலைமை தாங்கிய சம்பந்தனையும் மாவை சேனாதிராஜாவையும் தவிர, கூட்டமைப்பின் சிதைவுக்கும் தமிழரசு கட்சியின் இன்றைய பரிதாபகரமான நிலைக்கும் வேறு யாரை பொறுப்பு என்று கூறமுடியும்?

தமிழரசு கட்சியைப் போன்று உள்ளக முரண்பாடுகளினால் சீரழிந்து கொண்டிருக்கும் வேறு எந்தவொரு கட்சியையும் இன்று இலங்கையில் காணமுடியாது. கடந்த வருட முற்பகுதியில் அந்த கட்சியின் புதிய தலைவரை தெரிவு செய்வதற்கு பொதுச் சபையில் நடத்தப்பட்ட தேர்தலும் இதற்கு முக்கியமான காரணம்.

தமிழரசு கட்சியின் 75 வருடகால வரலாற்றில் முன்னர் ஒருபோதுமே தலைவரை தெரிவு செய்வதற்கு தேர்தல் நடத்தப்பட்டதில்லை. தேர்தலை நடத்தினால் கட்சியின் அணிகளுக்குள் முரண்பாடுகள் வளர்வதை தவிர்க்க முடியாது என்பதை தெளிவாக உணர்ந்த காரணத்தினாலேயே தமிழரசு கட்சியின் ஸ்தாபக தலைவர்கள் ஏகமனதாக தலைவரை தெரிவு செய்யும் பாரம்பரியத்தை கடைப்பிடித்து வந்தனர். 1970 களின் முற்பகுதியில் தமிழரசு கட்சியின் தலைவர் பதவிக்கு அமிர்தலிங்கத்துடன் போட்டிடுவதற்கு முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்லையா இராஜதுரை முயன்ற வேளையில் அவருக்கு ஆலோசனை கூறி இணங்க வைத்து செல்வநாயகம் ஏகமனதாக அமிர்தலிங்கம் தெரிவாவதற்கு வழிவகுத்தார்.

புதிய தலைவரை பாரம்பரியத்தின் பிரகாரம் ஏகமனதாகவே தெரிவு செய்ய வேண்டும் தமிழரசு கட்சியின் நலன்களில் அக்கறை கொண்ட தரப்புகள் இடையறாது வேண்டுகோளை விடுத்த போதிலும் கூட சம்பந்தனாலேயோ அல்லது சேனாதிராஜாவினாலேயோ தேர்தலை தடுக்க முடியவில்லை. ஒரு வகையில் நோக்கினால், அந்த தேர்தல் போட்டியின் விளைவாக ஏற்படக்கூடிய சூழ்நிலையை தங்களது அரசியல் நலன்களை பாதுகாப்பதற்கான ஒரு வாய்ப்பாக பயன்படுத்துவதில் அவர்கள் மறைமுகமாக அக்கறை காட்டினார்கள் என லாம்.

அத்துடன் அவர்கள் எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவதில் அக்கறை காட்டாமல் இறுதிவரை பதவிகளில் இருப்பதிலேயே நாட்டம் காட்டினார்கள். அதனால் கட்சிக்குள் அவர்கள் மீதான மதிப்பும் மரியாதையும் கூட குறைவடையத் தொடங்கியது. தங்களது அனுபவத்துக்கும் மூப்புக்கும் பொருத்தமான முறையில் நடுநிலையாக அவர்கள் செயற்படவில்லை. மாறாக முரண்பாடுகளை ஊக்குவிக்கக்கூடிய அணுகுமுறைகளையே அவர்கள் கடைப்பிடித்தார்கள் என்பதே உண்மையாகும்.

தமிழ் மக்களினதும் கட்சியினதும் நலன்களுக்கும் மேலாக சம்பந்தனும் சேனாதிராஜாவும் தங்களது அரசியல் நலன்களுக்கும் பதவி நிலைகளுக்கும் முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்டார்கள். அதன் விளைவாகவே தமிழரசு கட்சி இன்று சீரழிவுக்கு உள்ளாகியிருக்கிறது. தலைவர் தேர்தல் ஒரே கட்சியைச் சேர்ந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலானதாக அன்றி இரு அரசியல் எதிரிகளுக்கு இடையிலானதைப் போன்றே அமைந்திருந்தது. அந்த தேர்தலில் போட்டியிட்ட இருவரும் கடந்த ஒருவருட காலமாக கடைப்பிடித்து வருகின்ற அணுகுமுறைகளும் அவற்றின் விளைவாக வடக்கில் தமிழரசு கட்சி மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்த சூழ்நிலைகளும் புறம்பாக ஆராயப்பட வேண்டியவை.

சம்பந்தனின் மறைவுக்கு பிறகு கடந்த ஏழு மாதகாலமாக சேனாதிராஜா நடந்து கொண்ட விதம் அவரது பல தசாப்த கால அரசியல் அனுபவத்துக்கு எந்த வகையிலும் பொருத்தமானதாக அமைந்திருக்கவில்லை.. அதன் விளைவாக தமிழரசு கட்சிக்குள் தனது அந்தஸ்தை தீர்மானிப்பதில் எந்த விதமான செல்வாக்கையும் செலுத்த முடியாத பரிதாப நிலை அவருக்கு ஏற்பட்டது மாத்திரமல்ல, அவருக்கு விசுவாசமானவர்கள் என்று தங்களை அடையாளம் காட்டிக் கொண்டவர்கள் கூட அவரைப் பாதுகாக்க முன்வராமல் வெறும் பார்வையாளர்களாக இருந்தனர். அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் எவ்வாறு செயற்படக் கூடாது என்பதற்கு மாத்திரமல்ல, ஒரு கட்சி அதன் மூத்த தலைவரை எவ்வாறு நடத்தக் கூடாது என்பதற்கும் கூட மாவை சேனாதிராஜா ஒரு உதாரணமாகும். இது நிச்சயமாக இன்றைய மற்றைய தமிழ் அரசியல்வாதிகளுக்கு குறிப்பாக தமிழரசு கட்சி அரசியல்வாதிகளுக்கு ஒரு படிப்பினையாக அமைய வேண்டும். அதை அவர்கள் உணர்ந்து செயற்படுவார்கள் என்று நம்புவது கஷ்டம்.

வழமையாக அரசியல் தலைவர்களின் இறுதிச் சடங்குகள் பிளவுபட்டு நிற்கும் அவர்களின் கட்சிகளின் அணிகள் வேறுபாடுகளை மறந்து ஐக்கியப்பட்டுச் செயற்படுவதற்கான ஒரு வாய்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுவதே இயல்பாகும். ஆனால், ஒரு அரசியல் தலைவரின் இறுதிச்சடங்கு எவ்வாறு நடத்தப்படக்கூடாது என்பதற்கு கடந்த வாரம் மாவிட்டபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் உதாரணமாக அமைந்து விட்டது கவலைக் குரியதாகும்.

தமிழரசு கட்சிக்குள் பிளவுபட்டு நிற்கும் அணிகள் எதிர்காலத்தில் இணக்கப் பாட்டுக்கு வந்து ஐக்கியமாக அரசியல் பயணத்தை தொடராமல் இருப்பதை உறுதி செய்ய வேணடும் என்பதில் அக்கறை கொண்ட சக்திகளே மாவை சேனாதிராஜாவின் இறுதிச் சடங்குகளை பொறுப்பேற்று நடத்தினார்கள் போன்று தெரிகிறது.

# யாழ்ப்பாணம்:- பிழையான கேள்வியும் சரியான பதிலும்

- அழகு குணசீலன் -

28 அமைப்புக்களின் கூட்டணியான என்.பி.பி.யும் அதன் பிரதான பங்காளி யான ஜே.வி.பி.யும், அதன் தலைவர் களும், ஜனாதிபதியும் அள்ளி வீசிய தேர்தல் வாக்குறுதிகளை கொள்கை களை நடைமுறைப்படுத்த முடியாமல் திண்டாடுகிறார்கள். இந்த வாக்குறுதி களை உங்களால் நிறைவேற்ற முடி யாது அப்படியானால் அவற்றை எப்படிச் செய்யப் போகிறீர்கள்? என் பதை விவாதிப்பதற்கு ஒரு பொருளா தார விவாதத்திற்கு வாருங்கள் என்று எதிரணியினர் எழுப்பிய கேள்விகளுக்கு ஒரு சரியான பதில் அளிக்கப்பட வில்லை.

அரசியல் செயற்பாடுகளுக்கான வீதி வரைபடம் அவர்களிடம் இருக்க வில்லை என்பதால் விவாதத்திற்கும் செல்லவில்லை. மாறாக மெயின் ரோட்டில் பயணிக்காது, பைரோட்டில் பயணித்ததாகவே அவர்களின் பதில்கள் அமைந்திருந்தன.

யாழ்ப்பாணம் உட்பட இடம் பெற்ற மக்கள் சந்திப்புக்களில் அநுர தனது வழமையான பாணியில் மூடப்பட்ட கேள்விகளை (CLOSED QUESTINS) அவரைக் காணக்கூடும் மக்களிடம் கேட்டு (கொந்தாய்த? ஒணத?) மக்களை பிரதான விடயத்தில் இரு ந்து திசை திருப்புவதை வழமை யாகக் கொண்டுள்ளார். மூடப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள் இரு வகையாக மட்டுமே இருக்க முடியும். ஒன்று ஆம் அல்லது இல்லை என்பது. மற்றையது ஏற்கனவே தயாரிக்கப்பட்ட ஒன்றுக்கு மேற்பட்ட சில விடைகளை கொடுத்து அதில் சரியானதை அல்லது கிட்டத்தட்ட சரியானதை (MULTIPLE CHOICE) தேர்வு செய்யச் சொல்வது.

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதியின் கேள்விகள் இந்த பாணியிலானவை. காங்கேசன்துறையில் ஜனாதிபதி மாளிகை தேவையா? என்று கேட்ட அவர், அங்கு கேட்க வேண்டிய பிரதான பிரச்சினைகள் தொடர்பாக மக்களிடம் கேட்க வில்லை. இதன் மூலம் இலங்கையர்களாக தெற்கின் பிரச்சினை தான் வடக்கிலும், கிழக்கி லும் என்று ஜனாதிபதி கூற வரு கின்றார். இது தென்னிலங்கை பொரு ளாதார பிரச்சினையை முதன்மைப் படுத்தி சிறுபான்மையினர் இனப்பிரச் சினையை மழுங்கடித்தல். ஜனரஞ்சக சினிமா அரசியலை பேசி திசை திருப்புதல். அநுரவை காண ரிக்கட் என்றால், அந்த நடன நடிகையை காண ஏறியது போல் பலர் பனை மரத்தில் ஏறிச் சாகவும் தயாராக இருந்திருப்பார்கள். இதுதான் இன் றைய யாழ்ப்பாணத்தின் அவதாரம்.

பொருளாதார நெருக்கடியுள்ள ஒரு நாட்டில், சிறுபான்மை தேசிய இனங் களின் உரிமைகளும், அடையாளங் களும் அங்கீகரிக்கப்படாத நிலையில் பொதுக் கொண்டாட்டம் யார் கேட் டார்கள். அந்தந்த சமூகம் அவர்களு க்கு உரிய கொண்டாட்டங்களை கொண்டாட முடியாதவாறு மத்தள மாக அடி வாங்குகிறார்கள். பொரு ளாதார சுமையினால் திண்டாடுகிறார் கள். உரிமைகள் மறுக்கப்படுகிறார் கள். ஆனால் பொதுக் கொண்டா ட்டம் என்ற பெயரில் தனது ஒக்டோபர் வெற்றியை கொண்டா போகிறது என்.பி.பி. பிற்போக்கு பாராளுமன்ற கட்சி அரசியலுக்கு ஒக்டோபர் புரட்சி முலாம் (?)

ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் தனது தேவைக்கு ஏற்ப கேள்விகளை கேட்டு மக்களை திசை மாற்றியுள்ளார். அவர் மக்களை கேள்வி கேட்க சொல்லி அதற்கான பதிலை வழங்கி யிருக்க வேண்டியதே முறையானது. சரி, மாறாக அவர் கேள்வி கேட்டி ருந்தாலும் அந்த கேள்விகள் எப்படி அமைந்திருக்க வேண்டும்? அந்த மக்களின் முக்கிய பிரச்சினைகள் சம்பந்தமாக அல்லவா அமைந்திருக்க வேண்டும். உங்களுக்கு சமஷ்டி வேண்டுமா? அல்லது 13 வது திருத் தத்தை மாகாணசபையை முழுமை யான அதிகாரங்களுடன் அமுல்படுத் தவா?

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதை விரும்புகிறீர் களா? இல்லையா?

வடக்கு கிழக்கில் அரசாங்கம் மேற் கொள்ளும் குடியேற்றங்கள், தொல் பொருள் அகழ்வாராய்ச்சிகள், அமை க்கப்படும் விகாரைகள் உங்களுக்கு விருப்பமா?



இராணுவ முகாம்கள் வேண்டுமா? அல்லது அவற்றை மூடிவிடவா?

வடக்கு, கிழக்கில் தமிழ் மொழியில் நிர்வாகத்தை விரும்புகிறீர்களா? சகல தமிழ்மொழி மூல மாணவர்கள் சிங்களம் கற்கவும், சிங்கள மொழிமூல மாணவர்கள் தமிழ் கற்கவும் ஏற்பாடு செய்தால் உங்களுக்கு சிச்களம் கற்க விருப்பமா..?

அப்போது மக்கள் எப்பா - ஓணந " அல்லது ஓவ் - ஓண என்று மனம் திறந்து பதிலளித்திருப்பார்கள்.

இறுதியாக இந்த யுத்தத்திற்கு பின்னணியில் இருந்து ஆட்சி இயந்திரத்திற்கு முட்டு கொடுத்து உங்கள் உறவுகளை கொன்றதற்கும், காணாமல் ஆக்கப்பட்டதற்கும் ....

வடக்கு கிழக்கு மாகாணங்களை பிரித்ததற்கும்....

சுனாமி நிர்வாக கட்டமைப்புக்கு எதிராக நான் அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தது உண்மையில் அரசாங்கத்திற்கு எதிராக அல்ல தமிழ் மக்களுக்கு எதிரானது என்பதை இப் போதாவது உணர்கிறேன் என்றும்....

ஒட்டு மொத்தமாக இனப்பிரச்சினை தீர்வுக்கான இந்திய இலங்கை சமா தான ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தாமல் தடுத்ததில் விடுதலைப்புலி களுக்கு சமமான பங்கு ஜே.வி.பி.க்கும் உண்டு என்பதற்கு பொறுப்பேற்று....

உங்களிடம் மன்னிப்புக்குக் கோரவே வல்வெட்டித்துறைக்கு வந்தேன் என்று அவர் கட்டியணைத்த அந்த தாயின் காலடியில் வீழ்ந்திருக்க வேண் டும். பிராயச்சித்தம் தேடியிருக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க 1983 இனக்கலவரத்திற்கு மன்னிப்பு கோரினார். அந்த முன் மாதிரியில் அல்லது புலிகளின் அரசி யல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பாணியில் ராஜீவ் கொலை, முஸ்லிம் கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதற்கு கூறியது போன்று அது ஒரு துன்பியல் நிகழ்வு என்றாவது கூறியிருக்கலாம்.

இதற்கு பெயர் தான் மக்கள் சந்திப்பு. மக்களின் கருத்தை அறிந்து அதை நடைமுறைப்படுத்துவது. அதை விடுத்து தான் தெற்கில் இருந்து கொண்டு போன ராஜபக்சாக்களுக்கு எதிரான அரசியலை விற்பனை செய்வ தல்ல. அதுவும் வல்வெட்டித்துறை அரசியல் சந்தையில்....! கமலஹாசனின் தசாவதாரம் பற்றி பேசிய ஜனாதிபதி அதில் கடந்த நான்கு மாதங்களில் தானும் சில அவதாரங்களுக்கு சொந்த க்காரன் ஆகி வருவதை மறந்து விட்டார். ஆகக்குறைந்தது ஜனாதிபதி தேர்தல் மேடை பாராளுமன்ற தேர்தல் மேடை, பாராளுமன்ற உரைகளில் அவர் போட்ட வேடங்களையாவது நினைத்து பார்த்திருக்க வேண்டும். அநுரகுமார திசாநாயக்க தலைசிறந்த அரசியல் பேச்சாளர். சமூக, பொருளாதா



ரர, அரசியல் ரீதியான ஆய்வுகள், கொள்கைகளில் அல்ல. மாறாக சின்னச்சின்ன வசனங்களை, சிரித்து, சிரித்து பேசி, வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் மக்களுக்கு ஏற்று வதில், வல்லவர். பேச்சு முடியும் வரை மக்களை தன் உரையோடு கட்டிப் போடுபவர்.

மூடப்பட்ட கேள்விகள் என்று சர்வ தேச ஆய்வுகள் கூறுகின்ற ஆம், இல்லை என்று பதிலளிக்க மட்டும் வாய்ப்பளிக்கின்ற கேள்விகள் ஜனாதி பதியின் கேள்விகள். ஒரு வகையில் மக்கள் முழுமையான பதிலை அளிப்பதை தடுக்கின்ற கேள்விகள் இவை. இதன் மூலம் கேள்வி கேட்ப வர் மிக இலகுவாக தனது பக்கம் தனக்கு வேண்டிய பதிலை மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். வியாபார- விளம்பரப்பாணி வித்தை.

யாழ்ப்பாணத்தில் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில், அதிகாரிகளுடனான உத்தியோகபூர்வ சந்திப்பில் ஜனாதிபதி மாற்று நொடியே போட்டார். அவர்தான் அநுர. அது தான் அவரின் அரசியல் பாணி.


யாழ். மாவட்டத்திற்கு அபிவிருத்திக் காக ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்த ப்படாமல் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டது என்றால் அதற்கான ஆதாரத்தை அவர் முன் வைக்க வில்லை. அருகில் அரசாங்க அதிபர், ஆளுநர் இருக்கிறார்கள் அந்த விபரங் களை அவர் அவர்களிடம் கேட்டி ருக்க வேண்டும் அல்லது அவர்கள் அந்த விபரங்களை தெரிவித்திருக்க வேண்டும். ஏனெனில் ஒட்டு மொத்த விபரம் அவர்களுக்குத் தான் தெரிந் திருக்கும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக பயன்படுத்தப்பட்டதா? இல்லையென் றால் எவ்வளவு திருப்பி அனுப்பப் பட்டது? என்ன காரணம் என்பதை அன்று அல்ல இந்த ஆண்டின் ஆரம்பத்தில் முதலாவது ஒருங் கிணைப்பு கூட்டத்தில் விபரங்களை பெற்றிருக்க வேண்டும். அதில் ஒருங்கிணைப்பு குழு தலைவராக, ஜே.வி.பி அமைப்பாளராக அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும் பொறு ப்பில்லாமல் இல்லை. கடந்த ஆண் டின் கால்வாசிக்கு இந்த ஆட்சியே பொறுப்பு.


அடுத்தடுத்த தேர்தல்கள், ஆட்சி மாற்றம் கூட இதற்கு காரணமாக அமைந்திருக்கலாம். வடக்கு கிழக்கில் நிலவிய அசாதாரண காலநிலை கூட சில திட்டங்களுக்கு தடையாக இருந் திருக்க முடியும். விகாரை காணிப் பிரச்சினையில் அரசாங்கத்தின் ஜனாதி பதியின் உண்மையான நம்பிக்கைக் குரிய முகவராக தன்னை காட்ட முயற்சித்த ஆளுநர் நிதி விடயத்தில் நிலைமையை என்ன நடந்தது பற்றி

(22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்களில் சாதகமான பலன் தரலாம். குடும்பத்தில் வீண் பிரச்னை ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கை துணையின் செயல்கள் உங்களுக்கு அதிருப்தியை ஏற்படும். பிள்ளைகள் நீங்கள் சொல்வதை கேட்டு நடப்பது ஆறுதலை தரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளுக்கான தடைகள் அகலும்





ரிஷபராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். குடும்பத்தில் சந்தோஷமும் மனநிம்மதியும் இருக்கும். உறவினர்கள், நண்பர்களின் ஆதரவும் கிடைக்கும். நிதானமாக பேசுவது நல்லது.





மிதுனராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மனமகிழ்ச்சி ஏற்பட அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துவது நன்மையை தரும். வழக்கு விவகாரங்களில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் அதிகப்படி வருமானம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான உறவு காணப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபடுவீர்கள். தாய், தந்தையரின் உடல் நிலையில் கவனம் தேவை.





சிம்மராசி அன்பர்களே! தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பூமி வீடு மனையால் லாபம் ஏற்படும். சுபகாரியங்கள் நல்லபடியாக நடக்கும். அடுத்தவர்கள் மூலமாக நடக்க வேண்டிய காரியங்கள் நல்லபடியாக நடக்கும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள்




கன்னிராசி அன்பர்களே! வீண் செலவுகள் குறையும். பண வரத்து அதிகரிக்கும். எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். அடுத்தவர்களின் நலனுக்காக உழைக்க வேண்டி இருக்கும். சொத்துக்களை வாங்கும் போதும், விற்கும்போதும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.




துலாம்ராசி அன்பர்களே! மனதிடம் அதிகரிக்கும். சுபச்செலவுகள் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசும்போது கவனம் தேவை. குடும்பாதிபதி சுக்கிரன் ராசியில் இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே சிறு பூசல்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளிடம் நிதானமாக பேசுவது நல்லது. தொழில் ஸ்தானத்தை புதன் பார்ப்பதால் சிறு பிரச்னைகள் தோன்றி மறையும்.





விருச்சிகராசி அன்பர்களே! சுபச்செலவுகள் அதிகமாகும். வீண் பேச்சை குறைப்பது நன்மை தரும். அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தினரது செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டும்படியாக இருக்கலாம். நிதானத்தை கடைபிடிப்பது வீண் பிரச்னை ஏற்படாமல் தடுக்கும். வாழ்க்கை துணை ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நன்மை தரும். எதைப் பற்றியும் விவாதிப்பதை தவிர்ப்பது நல்லது.








தனுசுராசி அன்பர்களே! கடும் முயற்சிக்கு பிறகு எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். தொலை தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் அவ்வப்போது ஏதாவது சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு மறையும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் உண்டாகும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம். எதிர்ப்புகள் விலகும். காரிய தடைகள் நீங்கும். வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தடைபட்டிருந்த வீடுப் பணிகள் நிறைவடையும்.




கும்பராசி அன்பர்களே! காரியங்களில் இருந்த சுணக்க நிலை மாறும். முயற்சிகளில் நல்ல பலன் காண்பீர்கள். சகோதரர்கள் வழியில் இருந்த பிரச்னைகள் நீங்கும். குடும்பத்தினரின் செயல்கள் நன்மை அளிக்கக்கூடிய வகையில் இருக்கும். எந்த விஷயத்தையும் கணவன், மனைவிக்கிடையே திட்டமிட்டு செய்வது நன்மை தரும். குழந்தைகள் உங்கள் சொற்படி கேட்டு நடப்பது மனஅமைதியை தரும்.




மீனராசி அன்பர்களே! நீங்கள் செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். சாதுர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். அனுபவப்பூர்வமான அறிவுத்திறன் அதிகரிக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் மனம் மகிழும்படியான நிகழ்ச்சி நடக்கும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் அதிகரிக்கும். கணவன் மனைவிக்கிடையே ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வதன் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உடல் ஆரோக்யம் மேம்படும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# யாழ்ப்பாணம்:- பிழையான கேள்வியும்

(21ம் பக்கத் தொடர்ச்சி) சொல்லவில்லை. தன்னை அரசுக்கு விசுவாசமாக காட்டுவதில் செலுத்திய கவனத்தை அதிகாரிகளுக்கு ஆதரவாக அல்லது கண்டனமாக காட்டவில்லை.

தமிழ்த்தேசிய கட்சிகளின் கொள்கை அடிப்படையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கோரிக்கை சரியானதே. ஆளுநரின் பதில் அதில் ஒரு சமரசத்தை காண்கிறது. ஒரு வகையில் இது ஒரு பிழையான முன்மாதிரி. மக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்துக் கொண்டு பின்னர், அதற்கு பதிலாக வேறுகாணி உங்களுக்கு தருகிறோம் என்ற கருத்தியல் மேலாண்மை அரசியல். இது வடக்கு மக்களுக்கான பொருளாதார அபிவிருத்தி திட்டம் அல்ல. விகாரைக்கு பிடிக்கப்பட்ட காணி. இது போன்ற சமரச முயற்சிகளும், முன்மாதிரிகளும் எதிர்காலத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இந்த முன்மாதிரி மிகவும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

வீதி அபிவிருத்தி பற்றிய அதிகாரிகளின் முன்மொழிவுக் கோரிக்கைக்கு ஜனாதிபதியின் பதில் இன்னும் வேடிக்கையானது. அபிவிருத்தி திட்டம் ஒன்றுக்கான செலவு, மற்றும் சுற்றுச் சூழல் தொடர்பான சரியான மதிப்பீட்டை செய்வதற்கு முதலில் பிரதேச செயலகம், மாவட்ட மட்டத்தில் அத் திட்டத்திற்கான அங்கீகாரம் பெற்று, களநிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே சரியான நிதித் தேவையை மதிப்பீடு செய்ய முடியும். இந்த முடிவு இல்லாமல் திட்டவரைபு ஒன்றை செய்வதற்கு அதற்கான அதிகாரிகளுக்கு திணைக்களத் தலைவர்கள் கட்டளையிடுவது தவறான நிர்வாக முன்மாதிரி. இதை அதிகாரிகள் சிரமதானமாக, எழுந்தமானமாக செய்யமுடியாது.

அப்படி ஒரு திட்டம் இல்லாத நிலையில் இல்லாத திட்டத்திற்கு அதுவும் ஜனாதிபதி விரும்புகின்ற சரியான மதிப்பீட்டு செலவுத் தொகையை ஏறக் குறைய என்று சொல்லாமல் சரியாக ரூபா. சதத்தில் எப்படி ஒரு அதிகாரி சொல்லமுடியும். அப்படி, இப்படி எல்லாம் இல்லை சரியான மதிப்பீடு வேண்டும் என்று திசைதிருப்பி அதிகாரிகள் மீது அதிகாரத்தை பிரயோகிக்கும் அவர், அதே கூட்டத்தில் பொருளாதார நெருக்கடி, நிதி தட்டுப்பாடு, அபிவிருத்திக்கு நிதியில்லாமை பற்றியும் பேசுகிறார் என்பது ஒன்றுக்கொன்று முரணானது. இதன் படி பார்த்தால் சரியான செலவு மதிப்பீட்டை சொல்லியிருந்தால் காசு இல்லை என்று சொல்லியிருப்பார் என்றே கொள்ளவேண்டி உள்ளது.

இது பட்டதாரிகளின் வேலையில்லா பிரச்சினைக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்புக்களை தேடுங்கள் என்பது போன்றது. பட்டதாரிகள் தனியார் துறை வேலைவாய்ப்புக்களை விரும்பாததற்கு காரணம் அங்கு ஓய்வுதியம் இன்மை என்ற காரணமும் அமைச்சருக்கு தெரிகிறது. அப்படியானால் முதலில் செய்யவேண்டியது இந்த இரு அரச, தனியார் துறைகளில் நிலவும் வேறுபாடுகளை நீக்க வேண்டியது இல்லையா? அரச, தனியார் வேலைவாய்ப்பில் உள்ள கவர்ச்சி வேறுபாட்டை போக்காமல் தனியார் துறைக்கு போங்கள் என்பது உண்மையில் அரசாங்கத்தின் பொறுப்பற்ற பதில்.

தனியார் துறை சமூகநலன் அடிப்படையில் வேலை வழங்குவதில்லை. அளவுக்கு அதிகமாகவும் வேலை வழங்குவதில்லை. அதை கடந்த காலங்களில் அரசாங்கமே பல்வேறு திட்டங்கள் ஊடாக செயற்படுத்தி வந்துள்ளது. தேர்தல் மேடைகளில் தனியார் துறையை இழுத்து மூடுவோம் என்றவர்கள் இப்போது அங்கு தான் வேலைவாய்ப்பு இருக்கிறது போங்கள் என்று கூறுகிறார்கள். இது தவறான உயர்கல்விக் கொள்கையின் விளைவு என்பதால் இதனால் கிராமப்புற வறிய பட்டதாரிகளே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அதற்கான மாற்று திட்டத்தை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

இவ்வாறு ஒன்றுக்கு ஒன்று முன்னுக்கு பின் முரணான கேள்விகளையும், பதில்களையும் வழங்கி பராக்கு காட்டும் அரசியலை செய்கிறது என்.பி.பி. இதில் இருந்து வடக்கு கிழக்கின் மற்றைய மாவட்டங்கள் சில விடயங்களை கற்றுக் கொள்ள வேண்டும். இவற்றை கவனத்தில் எடுத்து வடக்கு, கிழக்கு மற்றைய மாவட்டங்களில் மக்களும், சிவில் அமைப்புக்களும், அதிகாரிகளும் ஜனாதிபதியின் மக்கள் சந்திப்புக்களில் அவரின் அரசியல் தேவைக்கு பதிலளிப்பதை தவிர்த்து அந்தந்த மாவட்டங்களின் மக்களின், சமூக பொருளாதார அரசியல் தேவைகளை முதன்மை படுத்தி கேள்வி எழுப்ப வேண்டும். ஜனாதிபதியை பதிலளிக்க தூண்ட வேண்டும்.

159 உறுப்பினர்களை கொண்ட ஒரு பாராளுமன்றம் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிக்காமல் இழுத்தடிப்பது காலம் போகப்போக நிலைமையை இன்னும் மோசமாக்கும். தென்னிலங்கையில் அநுர ஆட்சி ஆதரவை இழந்து வருகிறது. இந்த நிலை தொடர்ந்தால் அதிகாரத்திற்காக இனவாதத்திற்கு எதிராக இனவாதம் செய்யாது ஆட்சி அதிகாரத்தை அரசியல் தியாகம் செய்ய இவர்கள் ஒன்றும் கௌதம புத்தர்கள் அல்ல.

வடக்கு, கிழக்கில் மக்கள் அரசியல் தீர்வு குறித்து கேள்வி எழுப்பும்போது, அரசாங்கம் தென்னிலங்கை மக்கள் சந்திப்புக்களில் வடக்கு, கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளை தெரிவித்து சிங்கள மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதையும் அரசாங்கம் கேட்டறிய முடியும்.

இப்படி நடந்தால் தான் அது மக்கள் சந்திப்பு. அரசாங்கம் பன்மைத்துவ சமூகங்களிடையே ஒரு தொடர்பாளராக செயற்பட முடியும்.

இல்லையேல் மக்கள் சந்திப்பு என்பது ஆளும் கட்சியின் தேர்தல் வெற்றிக்கான செயற்திட்டம். குருநாகல் மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி வடக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பேன் என்று கூறியிருக்கிறார். அந்த பிரச்சினைகள் எவை? எவ்வாறு தீர்க்கப்போகிறார்? என்பது குறித்து பேசவில்லை. இது வடக்கு கிழக்கில் தனக்கு ஆதரவு இருக்கிறது என்று தெற்கில் காட்டி அரசியல் அதிகாரம் பெறுவதற்கான முயற்சியாக இருக்கக் கூடாது.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா "சங்கீத சங்கமம் 2025" 01 யூன் 2025 ஞாயிற்றுக் கிழமைக்கு பின் போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். இந்நிகழ்வில் ஈழத்தில் இருந்து செஞ்சொற்செல்வர் - சிவபூமி அறக் கட்டளை தாபகர் ஆறு. திருமுருகன் அவர்கள் "வேர்களைத் தேடுங்கள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகின்றார். கலைமாமணி டாக்டர் நித்தியஸ்ரீ மகாதேவன் அவர் களது சங்கீத சங்கமம் இசை நிகழ்வும் இடம் பெறவுள் ளது. மேலதிக விபரங்கள் பின்னர் அறியத் தரப்படும்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial*
- *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# அவயங்களை இழந்த வன்னி மக்களுக்கு மறுவாழ்வு! கனடிய அரசு கனடிய வர்த்தக சபை அனுசரனை!

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் கீழ் முப்பரிமாண தொழில் நுட்பத்தினூடாக வடக்கு கிழக்கில் உள்ள அவயவங்களை இழந்த மக்களின் மறுவாழ்வை முன்னிறுத்தி விசேட திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக திட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கலிபோர்னியா பல்கலையின் ஓய்வு நிலை பேராசிரியர் காசி விஸ்வனாதன் செல்வகுமார் மற்றும் கனடா – இலங்கைக்கான வர்த்தக சபையின் இணைப்பாளர் குலா செல்லத்துரை ஆகியோர் இதை தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் 09 பெப்ரவரி 2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர்கள் மேலும் கூறுகையில், யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் center for prosthetics (cfp) மற்றும் இந்தியாவின் spark media இணைந்து மாற்றுத் திறனாளிகளின் வாழ்வை வலுப்படுத்தும் இந்த திட்டமாக இது முன்னெடுக்கப்பகின்றது.

யாழ் பல்கலை பொறியியல் பீடத்தின் தொழில் நுட்ப அனுசரணையூடாக கனேடிய அரசு மற்றும் கனேடிய வர்த்தக சபை ஆகியவற்றின் நிதிப் பங்களிப்பில் இந்த மறுவாழ்வு வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த திட்டம் கடந்த 7 வருடங்களுக்கு முன்னர் மலேசிய நிறுவனம் ஒன்றினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் குறித்த வரப்பிரசாதத்தை வன்னியில் உள்ள அவயவங்களை இழந்து நாளாந்தம் பல்வேறு அவமானங்களையும் அசௌகரியங்களையும் கண்டு வருவோர் பெற்றுக்கொள்ளும் வகையில் முதற்கட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது. இந்த முப்பரிமாண பொறிமுறை




யூடான அவயவங்களை பெற்றுக் கொள்ளும் பயனாளிகள் அதை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது தொடர்பாக பயிற்சிப் பட்டறை ஒன்று இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிமுதல் 9 ஆம் திகதி வரை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிள்ளது.

இதில் பங்கேற்க இலங்கையில் இருந்து 50 பேரை அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளோம். இதே நேரம் இந்த அவயவங்கள் முப்பரிமாண பொறிமுறையூடாக தயாரிக்கப்படுகின்றது. ஆனாலும் இந்த தொழில் நுட்பம் இலங்கையில் இன்மையால் அதை இந்தியாவில் இருந்து முதற் கட்டமாக பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இதை யாழ் பல்கலை பொறியியல் பீடம் முழுமையாக மேற்கொள்ளும். இதே நேரம் இந்த திட்டமானது யுத்தத்தில் பாதிக்கப்படு அவயவங்களை இழந்தவர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய விபத்து மற்றும் நோய்களால் அவயவங்களை இழந்தவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அவயவங்களை இழந்தவர்களுக்கு அவர்களது சுய மரியாதையை மீண்டும் உருவாக்கல் மற்றும் அவர்களின் பொருளாதார ஈட்டலுக்கான வழியை உருவாக்கல் ஆகியவற்றை மையமாக கொண்டு முன்னெடுக்கப்படும் இந்த திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான அவயவங்களை பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் 0742287850 என்னும் இலக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி பயன் பெற்றுக் கொள்ளுமாறும் முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் ஈ.பி.டி.பி. எம்பி திலீபன் இந்தியாவில் கைது

வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து இந்தியாவின் மதுரைக்கு சென்ற ஈபிடிபி கட்சியின் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் அங்கிருந்து பிறிதொரு கடவுச் சீட்டில் வெளிநாடு செல்ல முற்பட்ட நிலையில் இந்தியாவின் கேரளாவின் கொச்சி என்ற இடத்தில் வைத்து தமிழகப் பொலிஸாரால் கடந்த 10 பெப் 2025 திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இந்தியாவின் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலின் போது ஈ.பிடிபி கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்த அவர் பொதுத்தேர்தலில் போட்டியிடவில்லை. முன்னதாக பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகித்த வேளை சட்டவிரோதமாக மரம் வெட்டுதல், மணல் அள்ளுதல் போன்றவற்றில் இவருக்குத் தொடர்பு இருந்தது.



